# தமிழரசு

16-10-1993 ரூ.3







பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

**காதிகிராப்ட்**

அங்காடிகளில் கிடைக்கும்




தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...


நல்லோர் பெயரை மாவட்டங்களுக்குச்
சூட்டுவதுதான் சிறந்த நாகரிகம் ஆகும்.
—மாண்புமிகு முதல்வர் உரை ... 2

விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார்
மாவட்டத் தொடக்க விழா மற்றும்
தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டப்
பெயர் சூட்டும் விழா ... 9

புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் மலரும்
புதிய மாவட்டங்கள் பற்றிய
ஒரு கண்ணோட்டம் ... 14

32 திருக்கோயில்களுக்கு ரூ.1.65
கோடியில் திருப்பணி ... 18

மகாகவி பாரதியார் நினைவில்லம்
திறப்பு விழா ... 20

'வெள்ளையனே வெளியேறு' இயக்கப்
பொன்விழா நினைவுத்தூண்
திறப்பு விழா ... 25

அண்ணல் காந்தியடிகளின் 125-வது
பிறந்தநாள் விழா ... 27

பெண் உரிமை காப்பீர்!
சமூக நீதி காக்கும் நல்லெண்ணத்
தூதுவராய்ச் செயல்படுவீர்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 29

அரசு அளிக்கும் உதவிகள்
தொடக்கமேயன்றி, முடிவு அல்ல... ... 34

நமது மாநிலக் காவல் துறையினர்
திறமையாகப் பணிபுரிந்து வருகின்றனர்
—மாண்புமிகு முதல்வர் உரை ... 41



**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2024

புரட்டாசித் திங்கள் - 30

மலர்:24 இதழ்:8

16-10-1993

விலை: ரூபாய் மூன்று



# நல்லோர் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டுவதுதான் சிறந்த நாகரிகம் ஆகும்!

## விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழா மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரை

சிறப்பான இந்த விழாவில் கலந்து கொண்டு, 'விழுப்புரம்-ராமசாமி படையார்ச்சியார்' மாவட்டத்தைத் தொடங்கி வைத்து, தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குத் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்டம்' என்ற பெயரைச் சூட்டி, பல்வேறு அரசுத் திட்டங்களைத் தொடங்கி வைப்பதில், நான் பேருவகை அடைகின்றேன்.

அகிலம் முழுவதும் ஆட்கொண்டிருக்கும் இறைவனை, 'அருட்பெருஞ் ஜோதி, தனிப் பெரும் கருணை' என்ற தத்துவப் பொருளாய் நமக்குக் காட்டி, இந்த மண்ணில் இன்றும் ஒளியாய், உருவாய், திருவாய், கருவாய், நமக்குக் காட்சி அளித்து வரும் கருணைக் கடல், வள்ளலார் திருப்பெயராலும்; வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர் வீழ்ந்த ஓர் சமுதாயத்தை, மீண்டும் தலை நிமிரச் செய்திட, தன் வாழ்நாள் முழுவதும் உழைத்திட்ட பெருந்தகையாளர், ராமசாமி படையாட்சியாரின் திருப்பெயராலும், இரு மாவட்டங்களை உருவாக்கி, அலை கடலெனத்திரண்டுள்ள உங்கள் மத்தியில், அவற்றைத் தொடங்கி வைப்பதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பரந்த நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டுள்ள தென் ஆர்க்காடு மாவட்டம், இன்று முதல், தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம் றும்; விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்' என்றும் அழைக்கப்படும்.



அப்பர், திருஞானசம்பந்தர் போன்ற சமயப் பெரியோர்கள், அருளிச் சென்ற அருள் மொழிகள், மறைந்திடுமோ என்ற அச்சம் மிகுந்த சூழ்நிலையில், சென்ற நூற்றாண்டு, இம்மாவட்டத்தில் மருதூர் மண்ணில், வள் ளலார் பெருமகன் இராமலிங்கனார் அவதரித்தார். அருள் வள் ளலார் இராமலிங்கப் பெருமகனார், தம் வாழ்நாள் முழுவதும், இறைவனைத் தன் தாய்த் தமிழால் பாடியவர். பிறிதொருவர் குறை காண முடியாத அளவிற்கு, உலக மக்களுக்கு அன்பு நெறியைப் போதித்து, பிறர் எவரும் குறை கூறாக் குணக் குன்றாக வாழ்ந்து, அருளின் வடிவமாகத் திகழந்தவர். 'இறைவன் எங்கும் நிறைந்தவன், ஒளி வடிவம் ஆனவன்;' என்றும் நின்று நிலைத்து இருப்பவன்' என்பதை உணர்த்திப் பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டி, இன்றும் வள்ளலார், நம்மிடையே ஜோதியாக வாழ்ந்து வருபவர், என்ற சிறப்பைப் பெற்றார்.

அந்த மருள் அகன்ற மாமணிக்கு,
மேடையில் வீசுகின்ற அப்பூங்காற்றுக்கு,
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவையாம் அந்நீருக்கு,
கோடையிலே இளைப்பாறிக்கொள்ளும் குளிர்தருவுக்கு,
குளிர் தருவின் நல் நிழலுக்கு,
நிழலிடை மலர்ந்த அம்மலருக்கு,
நிழலில் கனிந்த அக்கனிக்கு,

இங்கே 'தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம்' எனப் பெயர் சூட்டி, அகமகிழ்ந்து கொண்டிருக்கிறோம் என்றால், அது மிகையாகாது.

அதேபோல், 'வாழ்ந்தவர் கோடி - மறைந்தவர் கோடி' என்றாலும்; மக்கள் மனதிலும், சரித்திரத்திலும் நின்று நிலைப்பவர்கள், மாபெரும் வீரர்களும், மானம் காத்தோருமே, என்ற இயற்கை நியதிப்படி, வாழ்ந்து மறைந்த ஒரு பெருந்தகையாளரின் சாதனைகளுக்குச் சிறப்புச் செய்யும் வண்ணம், 'விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டம்' அமைத்து, மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

உங்கள் நல்லாதரவோடு, லட்சோப லட்சம் தாய்மார்களின், சகோதரிகளின், பெரியோர்களின் நல்லாதரவு, என்றென்றும், உங்கள் சகோதரியான எனக்குப் பரிபூரணமாக உள்ளது என்பதை நிருபித்து, மீண்டும் உங்கள் முன் வந்து நிற்பதில், நான் பூரிப்படைகிறேன். லட்சோப லட்ச மக்கள் அன்போடு இங்கே கூடியுள்ளார்கள் என்றால், அதற்கு அடிப்படைக் காரணம், உங்கள் மன விருப்பங்களை அறிந்து, வேறு ஒருவரும் இதுவரை சிந்திக்காத, சிந்தித்துச் செயல்படுத்த முன் வராத உங்கள் கோரிக்கைகளை, நானே சிந்தித்து நிறைவேற்றி வருகிறேன் என்பதன் பிரதிபலிப்புத் தானே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

விழுப்புரத்தைத் தலைமை இடமாகக் கொண்டு, இன்று உதயமாகும் ராமசாமி படையாட்சியார் மாவட்டம், நம் தங்கத் தமிழகத்தின் நெற்றித் திலகமாக ஜொலிக்க வேண்டும் என்றும்; கடலூரைத் தலைமை இடமாகக் கொண்ட, 'தென் ஆர்க்காடு-வள் ளலார் மாவட்டம்', அத்திருமகனின் முகப் பொலிவை உணர்த்தும், அருள் ஜோதியாய் விளங்க வேண்டும் என்றும், எனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துவதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஜாதி, சமய, அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, நல்லோர்களின் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டும் நனிநாகரீகம், அனைவருக்கும் வருவது இல்லை. பரந்த மனதும், தன்னம்பிக்கை

யும் உடையவர்கள் தான், அனைத்துப் பேதங் களையும் கடந்து, நல்லவர்களையும், வல்லவர் களையும் பாராட்டிச் சீராட்டி, மகிழ்ச்சி அடைய முடியும்.

ஒரு காலத்து வருவாய் ஈட்டும் எண்ணத் துடன், ஆங்கிலேயர் ஆட்சி அமைத்திருந்த பெரிய மாவட்டங்கள், நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும், பல்வேறு ஆட்சியினரின் கீழ் தொடாந்தது.

பெரிய மாவட்டங்களாக இருந்தால், வளர்ந்து வரும் மக்களின் தேவைகளை அறிந்து, வளர்ச்சிப் பணிகளை முறைப்படி துரிதமாக மேற்கொள்ள இயலாது என்பதை உணர்ந்து, நிர்வாக நலன் கருதி, பெரிய மாவட்டங்கள் அனைத்தையும் பிரித்து, சிறிய மாவட்டங்களாக் ஆக்கிவிட வேண்டும் என்றும்; அவ்வாறு பிரிக்கப்படும் மாவட்டங்க்ளுக்குத், தமிழக மக்களால், தங்கள் வணக்கத்திற்கு உரியவராய் ஏற்றுக்கொள்ளப் பட்ட, தலைவர்களின் பெயர்களைச் சூட்டுவது என்றும், துணிச்சலோடு முடிவு எடுத்து, முதன் முதலில் அறிவித்தவர், நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தான். அவரது அடிச்சுவட்டில் ஆட்சி நடத்தி வரும், உங்கள் அன்புச் சகோதரியான நானும், எங்கள் அரசும், அதே துணிச்சலுடனும், தன்னம்பிக்கையுடனும், அவர் விட்டுச் சென்ற பணிகளை, அதே உணர்வுடன் தொடர்ந்து ஆற்றி வருகிறோம்.

இன்று ராமசாமி படையாட்சியார் பெயரிலும், வள் ளலார் பெயரிலும், மாவட்டம் கண்டிருப்பது போல்; பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்



களின் பெயரை, மீண்டும் திண்டுக்கல்லைத் தலைமை இடமாகக் கொண்ட மாவட்டத்திற்கே சூட்டினோம். காஞ்சிபுரத்தைத் தலைமை இட மாகக் கொண்டிருந்த, செங்கற்பட்டு மாவட்டத் திற்கு, 'தந்தை பெரியாருக்கும் - பெருந்தலைவர் காமராஜருக்கும் - உத்தமத் தலைவர் முத்துராம லிங்கத் தேவருக்கும் - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.-க்கும் - வெள்ளையர் ஏகோதிபத்தியத்தை







எதிர்த்து, முதல் முழக்கமிட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கும்' மாவட்டங்கள் கண்ட, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் திருப்பெயரால், 'செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம்' எனப் பெயர் சூட்டி மகிழ்ந்தோம்.

முன்பு இருந்த ஆட்சியாளர்கள் தொடவே அஞ்சிக் கிடந்த, தஞ்சை மாவட்ட பிரிவினைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, கண்ணியம் மிகுந்த காயிதேமில்லத் திருப்பெயரைத் தாங்கிய, 'நாகப் பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம்' அமைத்தது, உங்கள் அன்புச் சகோதரி தான் என்பதை, அனைவரும் நன்கு அறிவார்கள்.




இந்த மாவட்டத்தில், எங்கள் ஆட்சி பொறுப் பேற்றுக் கொண்ட இந்த இரண்டாண்டு கால கட்டத்தில், என்னென்ன அரிய பணிகளை மேற் கொண்டுள்ளோம் என்பதை அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கடந்த ஆண்டு, விழுப்புரத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில், இம்மாவட்டம் முழுவதும் பயன் பெறும் வகையில், 175 கோடி ரூபாய்க் கான திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தேன். அதேபோல், இன்றைக்கு இங்கே நடைபெறும் இந்த மகிழ்ச்சியான விழாவில், இரண்டு மாவட்டங் களுக்கும் சேர்த்து, 304 கோடி ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தும், கட்டடங் களுக்கு அடிக்கல் நாட்டியும், இப்பகுதியின் துரிதமான வளர்ச்சிக்கு வழி வகுத்ததில், பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் பிரசித்தி பெற்ற மாவட்டங் களில் ஒன்றான, தென் ஆர்க்காடு மாவட்டத்தில், ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், மலை ஜாதி யினர், பிற்பட்ட மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப் பினர், எனப் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இம்மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேம் படுத்துவதற்கு, உங்கள் சகோதரியின் தலைமை யில் அமைந்துள்ள இந்த அரசு, கடந்த இரண்டு

ஆண்டுகளாக, பல திட்டங்களை இப்பகுதியில் செயல்படுத்தி வருகிறது. புதிய இரண்டு மாவட்டங்களில் உள்ள, கரும்பு விவசாயிகள் பயன் பெறும் வண்ணம், கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை, 30 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தும் பணியை, இன்று தொடங்கி வைத்துள்ளேன். தமிழ்நாடு மின் வாரியத்தால், 45.5 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப் பட்டுள்ள, 12 புதிய துணை மின் நிலையங்களைத் திறந்து வைத்துள்ளேன்.

சேத்தியாதோப்பு அருகில், வெள்ளாறு மீது பாலம் கட்ட வேண்டும் என்று, பல காலமாக அப்பகுதி வாழ் மக்கள், போராடி வந்ததை அறிந்தவுடன், அந்தப் பாலம் கட்டுவதற்கு வேண்டிய கூடுதல் நிதியை வழங்கி, விரைவில் கட்டுவதற்கு ஆணையிட்டேன். அந்தப் பாலத்தை இப்போது திறந்து வைக்கும்போது, அப்பகுதி வாழ் மக்கள், தங்களது நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதை அறிந்து, எத்தகைய மகிழ்ச்சியில் ஆழ்ந்திருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, என் மனம் பூரிப்படைகின்றது.

இம்மாநிலத்தின் தலைநகரான சென்னையிலிருந்து, கடலூரை இணைக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலை, 75 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. விழுப்புரத்தில் நடந்த அரசு விழாவில், இந்த திட்டப் பணியை நான் தொடங்கி வைத்தேன். இன்று இத்திட்டம், 50 கிலோமீட்டர் தூரம், நிறைவேறும் தறுவாயில் உள்ளது.

இதில் 2 பெரிய பாலங்கள், 87 சிறிய பாலங்கள் அமைக்கும் பணியும், நிறைவேறும் தறுவாயில் உள்ளது. இவ்வாண்டு இத்திட்டத்திற்காக, 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, இத்திட்டத்தைத் துரிதமாகச் செயல்படுத்த, ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் முழுவதுமாக நிறைவேறும்போது, இந்த நெடுஞ் சாலையில் போக்குவரத்து பெருகி, அதன் மூலம், இப் பகுதிவாழ் மக்களின் பொருளாதாரத்திலும், ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் என்பதை, மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லாக் கிராமங்களுக்கும், ஒரு குடிநீர் ஆதாரமாவது இருக்க வேண்டும், என்ற எங்களது கொள்கையின்கீழ், 135 கிராமக் குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கி வைக்கும் வாய்ப்பினைப் பெற்றதில், பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நாள் முதல், உங்கள் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, ஏழை எளியோருக்கும், நலிந்த பிரிவினருக்கும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் சமுதாயத் தினருக்கும், எண்ணற்ற உதவிகளைப் புரிய வேண்டும் என்ற இலட்சியத்தோடு, மக்கள் பணியில் தனது புனிதப் பயணத்தை, இதய சுத்தியோடு தொடர்ந்து நடத்தி வருகிறது. ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த இந்த சமுதாயத்தில், இன்னல் களை அனுபவிப்பதை மட்டுமே, தங்கள் வாழ்க்கை யின் வாடிக்கையாகக் கொண்டுவிட்ட, நலிவுற்ற பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை எப்பாடு பட்டாகிலும், உயர்த்த வேண்டும் என்ற நல் லெண்ணத்துடன், இந்த அரசு செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் வளம் பெற, ''புதிய 10 அம்சத்



திட்டம்'' ஒன்றினை அறிவித்து, நாங்கள் செயல் படுத்தி வருகிறோம்.

ஆதிதிராவிட மக்களுக்குத் தகுந்த தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்து, அவற்றின் மூலம், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தி, அவர்கள் வாழ்க்கையில் வளமை காணுவதற்கு, எங்கள் அரசு புதிய திட்டங்களை மேற்கொண்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில், ஆதிதிராவிடர் களுக்கெனத் தனியாக, இரண்டு தொழிற்பேட்டை களைத் தொடங்கியுள்ளது எங்கள் அரசு.

இந்தத் தொழிற்பேட்டைகளில் அமையவுள்ள புதிய தொழில்கள் மூலம் வெறும் 200 ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த, தொழில் முனை வோர்கள் மட்டும் உதவி பெறுவதோடு நின்று விடாமல், பல்லாயிரக்கணக்கான மக்களும் வேலை வாய்ப்பு பெற்று, பயன் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறால் வளர்ப்பு, நமது நாட்டின் கடற்கரைப் பகுதியில் வாழும் மக்களுக்கு, செல்வம் கொழிக் கும் தொழிலாக விளங்கி வருகிறது. அந்த இறால் வளர்ப்புத் தொழிலில், நமது ஆதிதிராவிட சகோதர சகோதரிகளை ஈடுபடுத்தி, அவர்கள் வாழ்வில் வளம் காண, எங்கள் அரசு மிகுந்த அக்கறை காட்டி வருகிறது.

ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில், ஒரு ஆதி திராவிடக் குடும்பத்திற்கு ஒரு எக்டேர் என்ற அளவில், இறால் வளர்ப்புப் பண்ணைகள் அமைக்க, உதவிப் புரியும் ஒரு மாபெரும் திட்டத்தை, தமிழக அரசு தற்போது செயல்படுத்தி வருகின்றது. அதேபோல, ஆதிதிராவிட மக்களை, பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடைய, வங்கி களின் நிதி உதவியோடு, 'தாட்கோ' நிறுவனம், 46 கோடி ரூபாய் செலவில், சுமார் 10,000 ஆதிதிராவிடக் குடும்பங்கள், பயன் அடையும் வண்ணம், ஒரு திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள, ஏழை எளிய மக்களின் வாழ்வில், ஏற்றம் காணும் திட்டங்களைத், தொடர்ந்து தொய்வின்றிச் செயல் படுத்துவோம் என்ற உறுதியை, இங்கே அளிக்க விரும்புகிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஏனைய பகுதிகள் அனைத்தும், மத, இன துவேஷத்தாலும், பிரிவினை மற்றும் பயங்கரவாதத்தாலும், வேறு பல பிரச்சினைகளாலும், தீராத 'தலைவலிகளில்' சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் வேளையில்; தமிழகம் மட்டுமே அமைதிப் பூங்காவாக, வளர்ச் சிப் பணிகளிலும், திட்டங்களிலும், நாளும் ஆர்வம் கொண்டு, பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், மக்கள் சக்தியை மட்டுமே மூலதனமாகக் கொண்டு, எங்கள் ஆட்சி அமைந்துள்ளதே ஆகும். மக்கள் சக்தி மட்டுமே துணை எனக் கருதி, உங்கள் அன்புச் சகோதரியான நான், அரசு நிர்வாகத்தை நடத்தி வருகின்றேன்.

மக்கள் சக்தியின் பால், அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ள நாங்கள், 5½ கோடி மக்களின் எண்ணங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக் கும், ஏற்றாற் போல் இயங்க வேண்டும் என்பதை, எங்கள் மக்கள் பணியின் அடிப்படைக் கோட் பாடாக வைத்து, இதய சுத்தியோடு செயல்பட்டு வருகிறோம். நான் பதவி ஏற்றவுடன், தமிழகத் தின் அமைதியைக் குலைக்கும், சில கொடிய சக்திகளுடன் கடுமையாகப் போராடி, அவற்றை விரட்டியடித்து, தமிழகத்தை மீண்டும் ஒரு

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்

தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் கடற்கரை அருகே வசித்து வரும் மீனவச் சமுதாயத் தினைச் சேர்ந்த குடும்பங்களுக்கு ''இலவச வீடு'' கட்டிக் கொடுக்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப் பினை அடுத்து தற்போது 1993-94-ஆம் ஆண்டில் மீனவக் குடும்பங்களுக்கு இலவச வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ரூ.16.13 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டு, அதன்படி இலவச வீடுகளும், குடியிருப்புகளுக்கு அருகிலேயே சமுதாயக் கூடங் களும் மற்றும் ஆழ்குழாய்க் கிணறுகளும் அமைத் துக் கொடுக்கவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப் பித்துள்ளார்.

இதன்படி, ரூ.14.87 கோடி மதிப்பில் 5,719 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இவ் வாறு கட்டிக் கொடுக்கப்படும் ஒவ்வொரு இலவச வீடும் ரூ.26,000 மதிப்பில் இருக்கும். மேலும், இத்தகைய குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ரூ.60 இலட்சம் மதிப்பில் 48 சமுதாயக் கூடங் களும் கட்டிக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு சமுதாயக் கூடமும் 1,25,000 ரூபாய் செலவில் கட்டப்படும். இவற்றோடு கூடி ரூ.66.25 இலட்சம் மதிப்பில், ஆழ்குழாய்க் கிணறு ஒன்றுக்கு ரூ.25,000 வீதம் 265 ஆழ் குழாய்க் கிணறுகளும், இந்த மீனவர் குடியிருப்பு களில் அமைத்துத் தரப்படும்.

மீனவர் சமுதாய குடும்பத்தினர் நன்முறையில் வாழ வழிவகுக்கும் ரூ.16.13 கோடி மதிப்புள்ள இத்திட்டத்தினை உடனடியாகச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்திரவிட்டுள்ளார்.

அமைதிப் பூங்காவாக உருவாக்க, பகீரத முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அத்தகைய தேச விரோத சக்திகள், என் உயிருக்குக் குறி வைத்துள்ளன என்பதை, நன்கு அறிந்தும் கூட, மக்களிடம் இருந்து இந்தத் தீய சக்திகள், என்னைப் பிரித்து விடாமல் இருக்க, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று, கோடிக்கணக்கான ரூபாய்க்கான திட்டங்களைத் தொடங்கி வைத்தேன். அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள், சமுதாயத்தின் அடித்தளத்தில், தாங்கொணாத் துயரங்களைத் தாங்கிக் கொண்டு, வாழ்ந்து வரும் பலதரப்பட்ட, ஏழை எளிய மக்களுக்குச் சென்றடைய வேண்டும்; அவர்கள் வாழ்க்கைத் தரம் மேலும் உயர வேண்டும், என்ற எனது சிந்தனையின் வெளிப் பாடு தான், வாரம் ஒரு மாவட்டத்திற்கு என ஒதுக்கி; அம்மாவட்டப் பொதுமக்களை நேரில் சந்தித்து, குறைகளைக் கேட்டு, மனுக்களைப் பெற்று, அம்மனுதாரர்களுக்குப் போய்ச் சேர வேண்டிய நியாயமான உதவிகள், ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் போய் சென்றடைய, தனி முயற்சிகள் மேற்கொண்டேன். மக்கள் குறை தீர்க்கும் பணியைச் சிரமேற்கொண்டு, எங்கள் அரசு செயல்படுகிறது என்பதை, யாரும் மறுக்க முடியாது. தேவையான பணியிடங்கள், எல்லா மாவட்டங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் எனது நேரடிப் பார்வையில், நானே மனுதாரர்களை நேரில் வரவழைத்து, நலத் திட்ட உதவிகளை வழங்கி மகிழ்ந்துள்ளேன்.

இரண்டாவது கட்டமாக, ஒவ்வொரு மாவட்டத் திற்கும் நானே சென்று, அரசு நலத்திட்ட உதவி களைத் தற்போது, நானே வழங்கி வருகிறேன்.

கோவை மாவட்டத்திலும், தர்மபுரி மாவட்டத் திலும், 21,000-க்கும் மேற்பட்டவர்களுக்கு, 13.49 கோடி ரூபாய் செலவில், அரசு நலத்திட்ட உதவிகளைச் சமீபத்தில் வழங்கினேன்.

இன்று இந்த இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த 16,000-க்கும் மேற்பட்ட மனுதாரர் களுக்கு, 15.5 கோடி ரூபாய் செலவில், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில், பெருமிதம் கொள்கிறேன். ஏழை எளியவர்களுக்கும், ஆதரவற்ற வர்களுக்கும், நேரடியாக உதவிகள் சென்றடைய வைப்பதில், எனக்குக் கிடைக்கும் மனத் திருப்தி, இதுவரை நான் ஈடுபட்ட வேறு எந்தப் பணி யிலும், எனக்குக் கிடைத்தது இல்லை. பொது மக்களின் குறைகளைத் தீர்க்கும் பணியை, ஒரு புனிதப் பணியாக நான் கருதுகிறேன்.

ஆதிதிராவிடப் பெருமக்கள் எங்கிருந்தாலும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் வளமான வாழ் விற்கும் நடவடிக்கை மேற்கொள்வதில், உங்கள் சகோதரியின் தலைமையிலான இந்த அரசு, தீவிரம் காட்டி வருவதை, நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள். குறிப்பாக இந்த இரண்டு மாவட்டங்களில் உள்ள, ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் இருக்கின்ற, சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.


தமிழரசு

16.11.93 இதழ்
மதுரை மாவட்டச்
சிறப்பிதழாக மலர்கிறது!

• பக்கத்துக்குப் பக்கம்
பயன்தரும் பல்சுவை விருந்து!

• கண்கவர் படங்கள்!
கவின்மிகு கட்டுரைகள்
கவிதைகள்!

• அரசு ஆற்றும்
அரும்பணிகளின் அரிய
தொகுப்பாக வெளி
வருகிறது!

தமிழரசு

படிக்க-பயன்பெற-பாதுகாக்க








# விழுப்புரம்-ராமசாமி படையாட்சியார் மாவட்டத் தொடக்கவிழா மற்றும் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழா

- மக்கள் மன்றத்தின் முன்னே மாவட்டங்கள் மலர்ந்தன!
- புதிய போக்குவரத்துக்கழக வழித்தடங்கள் பிறந்தன!
- அனைத்து மகளிர் காவல் நிலையம் திறந்து வைக்கப்பட்டது!
- காவல்துறையினரின் கவின்மிகு கல்யாண மண்டபம் தொடங்கி வைக்கப்பட்டது!

## தமிழகத்தின் 23-வது மாவட்டத்துவக்க விழா

தமிழகத்தின் 23-வது மாவட்டமாக உதயமாகும் விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத் தொடக்க விழாவும், தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டப் பெயர் சூட்டும் விழாவும் 30.9.1993 அன்று கடலூர் மஞ்சை நகர்த் திடலில் கோலாகலமாக நடைபெற்றது.

அன்று கடலூர் நகரமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. காணுமிடமெல்லாம் அலங்கார வளைவுகளும், முதல்வரின் திருவுருவப் படங்களும் நீக்கமற நிறைந்திருந்தன. ஆடவரும், பெண்டிரும் தங்கள் வீட்டு விழா போல் கருதி, குடும்பம் குடும்பமாக, சாரை சாரையாக மஞ்சை நகர்த்திடல் நோக்கி சென்ற வண்ணம் இருந்தனர். தமிழகத்தின் அனைத்துச் சாலைகளும் கடலூரை நோக்கியே இருந்தன. இதுவரை கடலூர் கண்டிராத பிரம்மாண்டமான விழாப்பந்தல், பெரியதோர் மாநாட்டுப் பந்தல் போல அமைந்திருந்தது.

விழாவில் கலந்து கொள்வதற்காக காலை 10.50 மணிக்கு, அண்ணா அரங்கு மைதானத்திற்கு



ஹெலிகாப்டரில் வந்து இறங்கிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை, அமைச்சர் பெருமக்களும், உயர் அதிகாரிகளும், சட்டப்பேரவை உறுப்பினர்களும் வரவேற்றனர். விழா மேடைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தபோது, வண்ணவண்ண பலூன்களுடன் குழந்தைகள் அவரை அன்புடன் வரவேற்றனர். விழா சரியாக 11 மணிக்கு தொடங்கியது. விழாவிற்கு மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி முத்தையா அவர்கள் தலைமை தாங்கினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த விழாவிற்கு, இலட்சக்கணக்கில் திரண்டிருந்த அனைவரையும் தலைமைச் செயலர் திரு டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஆனந்தன், திரு மு.தென்னவன், திரு ஜனார்தனன், திரு எஸ்.டி. சோமசுந்தரம், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திரு பிரபாகரராவ், திரு அசோக் வரதன் ஷெட்டி, வருவாய்த்துறைச் செயலர் திரு பால்ராஜ், சிறப்பு ஆணையர் திரு சி.என். ராம்தாஸ், இந்து அறநிலையத்துறை ஆணையர் திரு ஜி.ராமகிருஷ்ணன், திருக்குறள் திரு முனிசாமி ஆகியோர் பேசினார்கள்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தைத் தொடங்கி வைத்தார். கடலூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்துக்குத் தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனப் பெயர் சூட்டினார். மேடையிலிருந்து பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தினார். உடனே அருகில் அமைக்கப்பட்டிருந்த திரை விலகியது. உள்ளே பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்ட வரைபடம் தெரிந்தது. அடுத்த பொத்தானை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அழுத்தியதும் தென்னார்க்காடு மாவட்ட வரைபடம் 2 ஆக, தனித்தனி மாவட்டங்களாகப் பிரிந்தது. இரண்டு மாவட்ட வரைபடங்களுக்கு இடையே முதல்வர் அவர்களின் உருவம் தெரிந்தது.

அடுத்து தந்தை பெரியார், எம்.ஜி.ஆர், சோழன் ஆகிய போக்குவரத்துக் கழகங்களால் இயக்கப்படவுள்ள 28 புதிய பேருந்து வழித்தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். உடனே நான்கு அடி உயரத்தில் தாமரை மொட்டு போன்றதொரு வடிவம் பூ போல மலர்ந்தது. அதனுள்ளே முதல்வர் அவர்களின் திருவுருவம் தெரிந்தது. அதை ஒரு மினி பஸ் சுற்றிச்சுற்றி வந்தது.

பின்னர் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார். தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்ட அறிவொளி இயக்கத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர்





புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்தார். இதனையொட்டி 'வெளிச் சத்துக்கு வாங்க' என்ற அறிவொளி இயக்க மலரை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை, தென்னார்க் காடு-வள்ளலார் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஐ. பிரபாகரராவ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்து ரூ.304 கோடி மதிப்புள்ள வளர்ச்சித் திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். ரூ.1.50 கோடி மதிப்புள்ள நலத் திட்ட உதவிகளை முதல்வர் வழங் கினார். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவரது அறிவுரையின் படி, விழாவிற்கு வருகை புரிந்த அனைத்து அமைச்சர் பெருமக்களும் நேரடியாகப் பதினாராயிரம் பயனாளிகளுக்கு உதவித் தொகைகளை வழங்கினார்கள்.

ரூ.75 கோடி செலவில் சென்னையிலிருந்து கடலூரை இணைக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட் டப்பணியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப் பினர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோர் நினைவுப் பரிசுகளை வழங்கினார்கள்.

ராமசாமிப் படையாட்சியாரின் மனைவி திருமதி ஞானம்பாள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக் குப் பொன்னாடை அணிவித்தார். அவரது மகன் திரு எஸ்.எஸ்.ஆர். ராமதாஸ் (சட்டமன்ற உறுப்பினர்) உடனிருந்தார்.

விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அசோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., நன்றி நவில விழா இனிதே முடிந்தது. விழா முடிந்து மேடையை விட்டு இறங் கிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொது மக்களிடமிருந்து ஏராள மான மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தில், விழுப்புரம், திருக்கோயிலூர், உளுந்தூர்ப்பேட்டை, திண்டிவனம், செஞ்சி, வானூர், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் ஆகிய எட்டு தாலுக் காக்கள் அடங்கியுள்ளன.

இம்மாவட்டத்தில், 12 சட்ட மன்றத் தொகுதிகளும், 22 ஊராட்சி ஒன்றியங்களும் 2 நகராட்சிகளும், 1,084 கிராமங் களும் அடங்கும்.







கடலூரைத் தலைநகராகக் கொண்ட தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், காட்டுமன்னார்குடி, விருத்தாசலம், திட்டக்குடி ஆகிய ஆறு தாலுக்காக்கள் அடங்கும். இம்மாவட்டத்தில், 9 சட்டமன்றத் தொகுதிகளும், 13 ஊராட்சி ஒன்றியங்களும் 5 நகராட்சிகளும், 682 கிராமங்களும் அடங்கும்.

முழுவதும் பெண் காவலர்களைக் கொண்ட முதல் மகளிர் காவல் நிலையத்தைக் கடந்த ஏப்ரல் மாதம் சென்னையில் மாண்புமிகு முதல்வர் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து பர்கூர், தருமபுரி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலும், சென்னையில் மேலும் 2 இடங்களிலும் மகளிர் காவல் நிலையங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தைக் கடலூரில் திறந்து வைத்துவிட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 12.50 மணிக்கு மாவட்டக் காவல் துறை அலுவலர் அலுவலகத்திற்குச் சென்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, முதலில் மகளிர் காவலர் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். அதைத் தொடர்ந்து மகளிர் காவலர் அணிவகுப்பு நடந்தது. அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

அதைத் தொடர்ந்து, மகளிர் காவல் நிலையத்தைச் சுற்றிப் பார்த்தார். ஆய்வாளர் அறைக்குச் சென்று அங்கு பார்வையாளர் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டார். பார்வையாளர் புத்தகத்தில் மாண்புமிகு முதல்வர் எழுதி இருப்பதாவது:

"தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டத்தில் கடலூரில் முதல் மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் முக்கிய இடங்களில் மகளிர் காவல் நிலையம் திறக்கப்படும். பொது மக்களுக்கு, குறிப்பாகப் பெண்களுக்கு மகளிர் காவல் நிலையம் நம்பிக்கை ஊட்டுவதாகவும் அவர்





களுக்கு உதவிகரமாகவும் இருக்க வேண்டும்''.

விழாவில் தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், காவல்துறைத் தலைவர் திரு ஸ்ரீபால், கூடுதல் காவல்துறைத் தலைவர் திரு தேவாரம், ஐ.ஜி.க்கள் அலெக்சாண்டர், வீரராகவன், டி.ஐ.ஜி.க்கள் கோபாலன், கணேசன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரபாகரராவ், போலீஸ் சூப்பிரண்டுகள் சுனில்குமார், விஜய்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கடலூரில் 20 இலட்சம் ரூபாய் செலவில் காவல்துறையினரின் கல்யாண மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்களின் சம்பளத்தில் 5 நாள் முதல் 10 நாள் வரையிலான சம்பளத்தை நன்கொடையாகக் கொடுத்திருப்பதன் மூலம், இந்தக் கல்யாண மண்டபம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய கல்யாண மண்டபத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் திறந்து வைத்தார். காவல்துறையினரின் இந்த வித்தியாசமான முயற்சியை வெகுவாகப் பாராட்டி வாழ்த்தினார்.

வேலை இல்லாமல் ஓய்வாக இருக்கும்போதும், விடுமுறை நாட்களிலும் கல்யாண மண்டபத்தை நிர்மாணிக்கும் வேலைகளிலும் காவல்



துறையினர் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தங்களது வீட்டில் எந்த ஒரு நிகழ்ச்சி என்றாலும் தனியார் கல்யாண மண்டபங்களில் நடத்துவதற்கு வசதி இல்லாத காவல் துறையினருக்கு இனிக் கவலையில்லை. அவர்கள் இந்தக் கல்யாண மண்டபங்களில் நடத்திக் கொள்ளலாம். தவிர கூட்டங்கள், மாநாடு ஆகியவற்றை நடத்திக் கொள்ளலாம். மாவட்டத் தலைமையகத்தில் முக்கியப் பாதுகாப்புப் பணிக்கு வரும் வெளி மாவட்டக் காவல்துறையினரும் இந்த மண்டபத்தில் தங்கியிருக்கலாம்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கடலூர் விழாக்களை முடித்துக் கொண்டு ஹெலிகாப்டர் மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று மாலையே சென்னை திரும்பினார்.

விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் மாவட்டம் மற்றும் தென் ஆர்க்காடு-வள்ளலார் மாவட்ட மக்களுக்கு, அரசின் திட்டங்கள் விரைவாகச் சென்றடைய, புதிய மாவட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை!

—என். இளங்கோ



# புரட்சித்தலைவியின் நல்லாட்சியில் மலரும் புதிய மாவட்டங்கள் பற்றிய ஓர் கண்ணோட்டம்

ஆன்மீகத் திருத்தலங்களுடன் அறிவுசால் பெருந்தகைகள் அவதரித்த புண்ணிய பூமியாய் சன்மார்க்க நெறியின் சங்கமாகவும், ஆயகலைகளின் கலங்கரை விளக்கமாகவும் விளங்கி தமிழ்த்தாயின் மணிமகுடத்தில் மாணிக்கமாய் சுடர் விட்டு ஒளிதரும் அளவிற் பெரிய மாவட்டம் தென்னார்க்காடு மாவட்டம். பச்சை வயல்களையும், பரந்த கடலையும் தன்னகத்தே கொண்டு, வேளாண் பெருமக்களையும், உதிரத்தை வியர்வையாய் உமிழும் உழைப்பாளிகளையும், கடும் காற்றை எதிர்கொண்டு கலம் ஏந்தி வலம் வந்து மீன் பிடித்து வாழும் மீனவப் பெருங்குடி மக்களையும் பெருவாரியாகக் கொண்டதாகும்.

பிரிக்கப்படாத தென்னார்க்காடு மாவட்டம், தமிழ்நாட்டிலேயே அதிக பரப்பளவையும் மக்கள் தொகையையும் கொண்டது. 11,000 ச.கி.மீ. கொண்ட இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 48 இலட்சமாகும். இது கிழக்கில் வங்கக் கடலையும், தெற்கில் தஞ்சை, திருச்சி மாவட்டங்களையும், மேற்கில் சேலம் மாவட்டத்தையும் வடக்கில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களையும் எல்லைகளாகக் கொண்டது.

வரலாறு, சமயம், சமூகச் சீர்திருத்தம், தொழில், வேளாண்மை ஆகிய பல துறைகளில் உயர்ந்த இடத்தினைப் பெற்று விளங்குவது தென்னார்க்காடு மாவட்டம் ஆகும். பல்லவப் பேரரசுகள், ஆர்க்காடு நவாபுகள், ஆங்கிலேயர் என இதன் வரலாற்றுச் சுவடுகளில் வலம் வந்த அரசுகள் பலவாகும். ஆங்கிலேயர்கள் தம் தலைநகரைச் சென்னைப் பட்டினத்துக்கு மாற்றியதே பிரெஞ்சுக் குடியிருப்பான புதுச்சேரி ஆளுநர் டூப்ளே அவர்களின் தொடர்ந்த படையெடுப்பின் காரண










மாகவே. இல்லையேல், தமிழகத்தின் தலைநகரமாக கடலூர் நகரமே எழிலுற விளங்கியிருக்கும்.

புனித செயின்ட் டேவிட் கோட்டை, சுற்றிலும் அகழி, ஆர்ப்பரிக்கும் அலை கடலோரம் உயர்ந்த கட்டடங்கள், ராபர்ட் கிளைவ் அவர்களின் இல்லம், பரந்த பெரிய மஞ்சை நகர் மைதானம் ஆகியவை இம்மாவட்டத்தின் தலைநகரமான கடலூரின் சிறப்புக்குச் சான்று பகர்பவை.

சமயத் துறையில் சைவ, சமயக் குறவர்கள் நால்வருள் இருவரான திருநாவுக்கரசரும், சுந்தரரும் இந்த மாவட்டத்தில் தோன்றியவர்கள். நாவுக்கரசரின் தமக்கை திலகவதி அம்மையார், மெய்கண்டார் ஆகியோரும் சமயச் சீர்திருத்தம் கண்டு எம்மதமும் சம்மதம் என்ற கருணை வள்ளல் இராமலிங்க அடிகளும் இங்கு தோன்றியவர்களே. இங்கு கல்விக் கடலாக விளங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளை எவரும் மறக்க முடியாது.

உலகத்தவர்களுக்கு அச்சாணியாகிய உழவே இம்மாவட்டத்தின் முதன்மைத் தொழில். நெல், கரும்பு, வாழை முதலிய நன்செய் பயிர்களும், மணிலா, முந்திரி ஆகிய பணப் பயிர்களும் இம் மாவட்டத்தில் விளைகின்ற முக்கியப் பயிர்களாகும். பண்ருட்டியில் விளையும் இன்சுவைப் பலாவின் அருமை அனைவருக்கும் தெரிந்ததாகும். பையேந்தி நிற்கும் பணக்கார நாடுகள் இம் மாவட்ட முந்திரிக்குக் கையேந்தி நிற்கின்றன. இங்கிருந்து முந்திரி அமெரிக்கா, ஜெர்மனி, ஆஸ்திரேலியா, ஹாங்காங், சிங்கப்பூர், துபாய், சவூதி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. மலை நிலங்களை விட இம்மாவட்டத்தில் விளை நிலங்களே மிகுதியானவை.

தொழில் துறையில், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் இம்மாவட்டத்தின் சிறப்புக்குச் சான்றாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் அனல் மின்சாரம் நாட்டின் இருளை நீக்குகிறது. இம்மாவட்டத்தில் பல இடங்களில் கனிம வளங்களும், பெட்ரோல் போன்ற எரிசக்திகளும் மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன.













ஆங்கிலேயர் காலத்தில் தொடங் கப் பெற்று இன்று வரை இயங்கும் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலை யும், அதன் பின் பல சர்க்கரை ஆலைகளும் இம்மாவட்டத்தில் அமைந் துள்ளன. கடலூருக்கு அண்மை யிலுள்ள சிப்காட் தொழிற்பேட்டை யில் பல வேதியல் தொழில் கூடங்கள் விண்ணுயரக் காட்சி தருகின்றன. பல சிறுதொழில்களும் இம்மாவட் டத்தில் சிறப்புற நடைபெற்று வருகின்றன.

சமூக அடிப்படையில், இம் மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப் பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் பான்மையாக வாழ்கின்றனர். எனினும் கற்றறிந்த சான்றோர் இம்மாவட்டத்தில் அதிகம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கி.பி. 1822-இல் சர் தாமஸ் மன்றோ அவர்கள் தலைமையில் அமைக்கப் பெற்ற, கற்றவர் தொகைக் கணக்கெடுப்புக் குழு, தென்னார்க் காடு மாவட்டத்திலேயே கற்றவர் அதிகம் என ஆய்ந்து அறிவித்தது. 1879-இல் டவுன் காலேஜ் (Town College) என்ற அரசு கல்லூரியும், 1884-இல் புனித ஜோசப் கல்லூரி என்ற தனியார் கல்லூரியும், இங்கு விளங்கி பின் மறைந்து விட்டன. சாதியும், சமயமும் பொய் என ஆதி யில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி கண்ட வள்ளலாரிடம் குன் றாத பற்றுக் கொண்ட ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் இந்த மாவட்டத்தில் தோன்றிய சன் மார்க்க அன்பர். இவர் தமிழகத்தின் முதல் முதலமைச்சராக விளங்கித் தொண்டாற்றியவர். பிற்படுத்தப் பட்ட சமூக வழிகாட்டியான திரு எஸ்.எஸ்.இராமசாமி படையாட்சியார் இங்கு தோன்றி அரசியல் தொண் டாற்றியவர். இதன் காரணமாகவே, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட புதிய மாவட்டத்திற்கு இவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது. பல தாழ்த்தப்பட்ட இனத் தலைவர் களும் இங்கு தோன்றியவர்கள். கல்வி, கள்ளுண்ணாமை இவற்றை வலியுறுத்திய ஆதனூர் நந்தனாரும், தில்லையில் வாழ்ந்த சீர்திருத்தச் செம்மல் சுவாமி சகஜாநந்தாவும் இம்மாவட்டத்தில் போற்றத்தக்க வர்கள். இம்மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வர்களின் மேம்பாட்டிற்காகப் பல வழிகளில் அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகின்றது. 13.23 இலட்சம் ஆதிதிராவிடர்களில் 20,000 ஆதிதிராவிடர் குடும் பங்கள் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.

இம்மாவட்டம் வரலாறு, சமயம்,







ராபர்ட் கிளைவ் இல்லம்

கல்வி, உழவுத் தொழில், வாணிபம் எனப் பல துறைகளிலும் மேம்பட்டு விளங்குகிறது. இம்மாவட்டத்தில் தான் அக இருளை நீக்கி ஒளி வழி காட்டிய வள்ளலார் வாழ்ந்த வடலூரும், புற இருளை நீக்கி மின் ஒளி வழங்கும் நெய்வேலியும் அருகருகே உள்ளன. சிதம்பரம், திருக்கோயிலூர், திருவெண்ணெய்நல்லூர், திருப்பாதிரிப்புலியூர், திருவந்திபுரம் முதலிய திருத்தலங்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. பண்ணார் தமிழ் வளர்த்த அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இம்மாவட்டத்தில் உள்ள சிதம்பரத்தில் அமைந்து கல்விப் பணியாற்றுவதில் முதலிடம் வகிக்கிறது. இம்மாவட்டத்தில் திண்டிவனத்திலிருந்து திருவண்ணாமலை மார்க்கத்தில் 25 கி.மீ. தொலைவில் எழுந்து நிற்கும் மலை மீது விண் தொட நிமிர்ந்து நிற்கின்ற 700 ஆண்டுகளுக்கு முந்தைய ராஜா தேசிங்கு ஆண்ட செஞ்சிக் கோட்டை இன்னும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கின்றது.



இவ்வாறு பல வகைகளிலும் சிறப்பும், உயர்வும் பெற்ற இம் மாவட்டம் இப்பொழுது நிர்வாக வசதிக்காகவும், மக்கள் நலனுக்காகவும் இரண்டுமாவட்டங்களாகப்பிரிக்கப்பட்டு ஒன்று கடலூரைத் தலைமையிடமாகக் கொண்ட தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனவும், மற்றொன்று விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்ட ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனவும் பெயரிட்டு அழைக்கப்படுகிறது.

**தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம்**

'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் வள்ளலார். அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணை' எனும் அற்புதத் தத்துவத்தை உலகுக்கு வழங்கியவர் வள்ளல் பெருந்தகை. என்மார்க்கம் இறப்பொழிக்கும் சன்மார்க்கம் என்ற அடிகளாரின் சமரச சுத்த சன்மார்க்க சங்கம், சத்திய தருமச் சாலை, சத்திய ஞான சபை, சித்தி வளாகத் திருமாளிகை ஆகியவற்றை அன்பர்கள் ஈடேற அளித்துச் சென்றுள்ளார். சமய, சமுதாயச் சீர்திருத்தவாதியாக அறநெறி காட்டிய அடிகளாரின் பெயரை, கடலூரைத் தலைநகரமாகக் கொண்ட தென்னார்க்காடு மாவட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் பொருத்தமுறச் சூட்டியுள்ளார்.

**விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்**

சமுதாயத்தில் சிறப்புறப் பணியாற்றிய சான்றோர்களின் பெயர்களைப் பல இடங்களுக்குச் சூட்டி மகிழும் மரபு நாம் நன்கறிந்ததாகும். அந்த அடிப்படையில் பல மாவட்டங்களுக்குப் பெயர் சூட்டி உள்ளோம். இம்மாவட்டத்தில், கடலூருக்கு அருகில் உள்ள சூரப்ப நாயக்கன்சாவடி என்ற ஊரைச் சார்ந்தவர் மதிப்பிற்குரிய எஸ்.எஸ். ராமசாமிப் படையாட்சியார் ஆவார். பிற்பட்ட சமுதாயத்திற்கு வழிகாட்டியாகவும், சமூகப் பணிகளின் முன்னோடியாகவும், தமிழக அரசின் அமைச்சராகவும் விளங்கியவர். நாட்டு முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்தவர்.

ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் என்று பெயர் சூட்ட, பதினெட்டு வன்னியர் மன்றப் பிரதிநிதிகளும், தென்னார்க்காடு மாவட்ட 14 சட்டமன்ற உறுப்பினர்களும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எம்.ஆனந்தன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்களைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டனர். மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் மகிழ்வுடன் அதனை ஏற்று அவ்வாறே பெயர் சூட்ட இசைந்து இன்று செயல்படுத்தியுள்ளார்கள்.

இந்த மாவட்ட மக்களின் நீண்ட காலக் கனவு நனவாகும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், இதனை இரண்டாகப் பிரித்து தென்னார்க்காடு-வள்ளலார் மாவட்டம் எனவும், விழுப்புரம்-ராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனவும் பொலிவுடன் சூட்டி தமிழக மக்களின் நெஞ்சங்களை எல்லாம் மகிழ்வித்தார்.





# 32 திருக்கோயில்களுக்கு ரூ.1.65 கோடியில் திருப்பணி

## மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களைச் சீரான முறையில் நிர்வகிப்பதற்கு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், ''தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத்தை'' அமைத்து, பல்வேறு திருக்கோயில்களின் புதிய கட்டுமானப் பணிகள், திருப்பணிகள் மற்றும் ஆலய மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுபோன்ற ஆலய மேம்பாட்டுப் பணிகளுக்காகக் கடந்த 27.9.1993 அன்று தமிழ்நாட்டிலுள்ள 23 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக ஒரு கோடியே 70 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார் இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தற்போது மேலும், கீழ்க்கண்ட 32 திருக்கோயில்களுக்குத் திருப்பணிகள் செய்வதற்காக ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

அ/மி. நீலகண்ட பிள்ளையார் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. ஆதிகேசவபெருமாள் திருக்கோயில், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டம்.

அ/மி. வீரடேஸ்வரர் திருக்கோயில், தென் ஆர்க்காடு மாவட்டம்.

அ/மி. சிவகொழுந்தேஸ்வரர் திருக்கோயில், தென்னார்க்காடு மாவட்டம்.

அ/மி. தேவநாதசுவாமி திருக்கோயில், தென் ஆர்க்காடு மாவட்டம்.

அ/மி. சிஷ்டகுருநாதசுவாமி திருக்கோயில், தென்னார்க்காடு மாவட்டம்.

அ/மி. நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம்.

அ/மி. சந்திரசூடேஸ்வரர் திருக்கோயில், தர்மபுரி மாவட்டம்.

அ/மி. பொன்னேஸ்வரசுவாமி திருக்கோயில், தர்மபுரி மாவட்டம்.

அ/மி. மாரியம்மன் காளியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம்.



இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக அமைப்பு பற்றி நான் சில விளக்கங்களைக் கூற விரும்புகின்றேன். இத்துறையின் ஆளுகைக்கு உட்பட்ட திருக்கோயில்கள், மடங்கள் குறிப்பிட்ட அறக்கட்டளைகள் மற்றும் சமண மத அறநிலையங்கள் ஆகியவைகள் மொத்தம் 35,150 ஆகும்.

இத்துறை 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றும் ஒரு துணை ஆணையர் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகிறது. மேலும், இம் மண்டலங்கள் 17 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டமும் ஓர் உதவி ஆணையரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. தற்போது நம் மாநிலம், நிர்வாக வசதிக்காக 21 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மாவட்டங்களுடைய எண்ணிக்கை அதிகரித்த போதிலும் மாநிலம் முழுவதிலும் அறநிலையத் துறையைப் பொறுத்தவரை 8 மண்டலங் களாகவே இயங்கி வருகின்றன.

அத்துடன் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள திருக் கோயில்களுக்குச் சொந்தமாக, ஏராளமான சொத்துக்கள் உள்ளன. அவற்றின் விலை மதிப்பும் தற்போது மிகவும் உயர்ந்து உள்ளது. அவற்றை உரிய முறையில் பயன்படுத்தி வருமானத்தைப் பெருக்க வேண்டிய நிலை ஏற் பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு சென்னை, சேலம் மண்டலங் களில் இருந்து சில பகுதிகளைப் பிரித்து வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் வேலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டல மும், அதேபோன்று மதுரை மண்டலத்தை 2 ஆகப் பிரித்து பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டத்தில் சிவகெங்கையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய மண்டலமும் அமைக்கப்படும்.

இந்த 8 மண்டலங்களில் குறிப்பாக, சென்னை, சேலம், மதுரை போன்ற 3 மண்டலங்களில் திருக்கோயில்களுக்குச் சொந்தமான விலை மதிப்புள்ள நகர்ப்புற நிலங்கள் இருக்கின்றன. அங்கே நிர்வாகப் பணிகள் அதிகரித் துள்ளன. ஆலயங்கள் குறித்த வழக்குகளும் அதிகமான அளவுக்கு நிலுவை யில் உள்ளன. மதுரை, சென்னை மண்டலங்களில் புகழ்பெற்ற, முக்கியத் துவம் வாய்ந்த திருக்கோயில்கள் பல உள்ளன. நாளுக்கு நாள் வருமானம் அக்கோயில்களில் பெருகி வருகிறது.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்' என்னும் நூலிலிருந்து.

---

அ/மி. தியாகராஜாசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை.

அ/மி. தர்மராஜா திரௌபதியம்மன் திருக் கோயில், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

அ/மி. அம்மன் பெருமாள் திருக்கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. லஷ்மி நாராயணப்பெருமாள் திருக் கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. தண்டபாணிசுவாமி திருக்கோயில், வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்

அ/மி. ஆகாசமாரியம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

அ/மி. ஆதிகேசவபெருமாள் திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.

அ/மி. மாரியம்மன் திருக்கோயில், திருச்சி மாவட்டம்.

அ/மி. மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை மாவட்டம்.

அ/மி. சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கோயம்புத்தூர் மாவட்டம்.

அ/மி. தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.

அ/மி. கொங்காளியம்மன் திருக்கோயில், பெரியார் மாவட்டம்.

அ/மி. மதுரைவீரன் மாரியம்மன் திருக் கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. சித்தநாத சிவன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

அ/மி. மருந்தீஸ்வரர் திருக்கோயில், திரு வான்மியூர், சென்னை.

அ/மி. மாகாளியம்மன் திருக்கோயில், தென்னார்க்காடு வள்ளலார் மாவட்டம்.

அ/மி. பன்னன்-குரந்தாதையா ஐயனார் திருக்கோயில், புதுக்கோட்டை மாவட்டம்.

அ/மி. நாகநாதசுவாமி திருக்கோயில், திருச்சி மாவட்டம்.

அ/மி. ஸ்ரீ கந்தசாமி திருக்கோயில், சேலம் மாவட்டம்.

அ/மி. கைலாசநாதசுவாமி திருக்கோயில், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்.





# மகாகவி பாரதியார் நினைவில்லம் திறப்புவிழா

சென்னையில், கடைசிக் காலத்தில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் தமிழ்நாடு அரசால் நினைவுச் சின்னம் ஆக்கப்பட்டது. 2.10.93 அன்று, திருவல்லிக்கேணியில் உள்ள துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவில் இருக்கும் அந்த வீட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

விழா நாளன்று காலை 10.30 மணியளவில், இவ்விழாவில் பங்கேற்க வருகை தந்த முதல்வர் அவர்களுக்கு- அவ்வீட்டின் எதிரே உள்ள அருள்மிகு பார்த்தசாரதி கோயில் வாயிலில் பூரணகும்ப மரியாதையுடன் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன்பின், மங்கல இசை முழங்க தேசியகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வருகை தந்தார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு தமிழக அரசு அமைச்சர் பெருமக்களும்- செய்தித்துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி,இயக்குநர் திரு. இரா. சம்பத் ஆகியோரும் மற்றும் உயர் அதிகாரிகளும் அவரை மலர்ச்செண்டு வழங்கியும், பொன்னாடை அளித்தும் வரவேற்றார்கள்.

அவ்வில்லத்தின் முன் திரண்டிருந்த மக்கள் ''பாரதி புகழ் ஓங்குக''.. ''பாரதி கண்ட புதுமைப் பெண் புரட்சித்தலைவி வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி முழக்கினர்.

மகாகவி பாரதியார் நினைவில்லத்தைத் திறந்துவைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உள்ளே அமைக்கப் பட்டிருந்த தேசியகவி பாரதியார் திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார். திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாரியத் தலைவர்கள், அரசு உயர் அதிகாரிகள் இந்த விழாவிற்கு வந்திருந்தனர்.

இந்த விழாவின்போது, மகாகவி பாரதியார் குடும்பத்தினர் மாண்புமிகு முதல்வருக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டனர். அவர்கள், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்குப் பொன்னாடை வழங்கி மரியாதை செய்தனர்.



# பாரதி இல்லம்:

# சில நினைவுகள்-விவரங்கள்

இந்தியா, அடிமை விலங் கறுக்கும் ஆவேசம் கொண்டிருந்த காலத்தில் - எழுச்சி பொங்கும் தம் ஏற்றமிகு கவிதைகளாலே, அந்தக் கனல் அடங்காமல் காத்துப் பெருமை கொண்ட தேசியக் கவிஞர்-மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆவார்.

பிறந்த நாட்டைத் தாய்நாடு என்பதுதான் உலக வழக்கு; அந் நிலை மாற்றி 'தந்தையர் நாடு' என்று கூறியும் சிறப்பித்தவர் இவர். பாப்பா பாட்டுப் பாடிய இந்த முறுக்கு மீசை முண்டாசுக் கவிஞர், தாலாட்டுப் பாட்டுப் பாடி னாரில்லை; ஏனென்றால், அவர் வாழ்ந்த காலம்- கண்துஞ்சாது பசிநோக்காது, அவரவரும் விடுதலை வேட்கை கொண்டிருந்த காலம்; சுதந்திரச் சூறாவளி வீசிய காலம்.



'வள்ளுவன் தன்னை உல கினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று பாடியவர் பாரதி; இவரைத் தமிழகத்திற்குத் தந்து தனிப்புகழ் பெற்றது எட்டயபுரம். பிறந்தநாள் - 11.12.1882. பெற்றோர் - சின்னசாமி, இலட்சுமியம்மாள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் - சுப்பிர மணியன்; செல்லமாக அழைத்த பெயர் - சுப்பையா. பைந்தமிழ்க் கவித் திறத்தாலே - பதினோராம் வயதிலேயே எட்டயபுரம் சமஸ்தான மன்னரால் இடப்பட்ட விருதுப் பெயர் - பாரதியார்.-இளமையிலே, இவருக்கு வாய்ந்த அன்பு மனை யாளின் பெயர் செல்லம்மாள்.

இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே - 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே' என்று ஆனந்தக் கூத் தாடிய இந்த மகா கவிஞனை - ஆங்கிலேயர் தம் கொள்ளிக் கண்





களால் குறிவைத்தனர்.

அதன் விளைவு? பிரெஞ்சுக்காரர்கள் ஆளுகையிலிருந்த புதுவைக்குப் பறந்தது இந்த புரட்சிப் புயல்; தொல்லை துயரங்கள் தொடர்கதையாயின.

அல்லல் நீங்கி, தமிழகம் திரும்பிய அவர் இந்தச் சென்னை மாநகருக்கு வந்து சேர்ந்தார். தம்புச் செட்டித் தெரு, மயிலாப்பூர் சித்திரக் குளம் கிழக்குத் தெரு - தெற்குத் தெரு, வீரராகவ முதலித்தெரு, வீரசாமி முதலி தெரு சைதாப்பேட்டை, முத்தியாலுப்பேட்டை, வேப்பேரி என இந்த சுதந்திரக் கவிஞனின் 'ஜாகை' அடிக்கடி இடம் மாறிக் கொண்டிருந்தது.

இந்தியா, விஜயா, கர்மயோகி, சக்ரவர்த்தினி - போன்ற ஏடுகளில் அந்த அற்புதக் கவிஞனின் எழுத்தோவியங்கள் இடம் பெறலாயின. 1904-ல் சுதேசமித்திரனில் பணியாற்றத் தொடங்கினார் பாரதி. திருவல்லிக்கேணியில் பார்த்தசாரதி கோயிலுக்குப் பின்புறம் உள்ள துளசிங்கப்பெருமாள் கோயில் தெருவில், 1920-ஆம் ஆண்டில் திரு குவளைக்கண்ணன் என்பார் மூலம் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தார் பாரதியார். அப்போது அந்த வீட்டின் கதவு எண்.67. இப்போது அந்த வீட்டின் கதவு எண்.83 ஆகும்.

அந்த வீடுதான் - இப்போது தமிழ்நாடு அரசு முறைப்படி கையகப்படுத்தி மகாகவி பாரதியின் நினைவில்லம் ஆக்கியுள்ள இல்லமாகும். பாரதியார் சென்னையில் தம் கடைசிக் காலத்திலே வாழ்ந்த வீடு இதுதான். சிலகால இடைவெளிக்குப் பின், அப்போதும் 'சுதேசமித்திரனில்' பணியாற்றிக்



## அண்ணா போற்றிய பெருமக்கள்

பாரதியார் நாட்டு மக்கள், முதலில் தங்கள் அச்சத்தை அடித்துத் துரத்த வேண்டும் என்று அவாவினார். தாழ்வு மனப்பான்மையைத் தூவென்று உதறித் தள்ள வேண்டும் என்று தூண்டினார். மக்கள் மனத்திலே நம்பிக்கையையும் துணிச்சலையும் விதைத்தார். அவர்களுள் மறைந்து கிடக்கும் மாபெரும் ஆற்றலைப் புலப்படுத்தினார். அந்த மாப்புகழ் வலிமை எவ்வாறு வீணாகிறது - மக்களின் தூங்குமூஞ்சித் தன்மை, அறியாமை, மூட நம்பிக்கைகள், தாழ்வு மனப்பான்மை, சாதி வெறி ஆகியவற்றின் காரணமாக எவ்வளவு தீமை விளைகிறது - என்பதை விளக்கினார்.

சிந்தனைத் தெளிவுடன் பாரதி நிலைமையை ஆராய்ந்தார். நாட்டில் நடமாடும் தீமைகளை வேரோடு கல்லி எறிய முனைந்தார். மக்கள் நலனில் அக்கறை கொண்ட 'மக்கள் கவிஞரை'த் தவிர, யாரும் அவ்வளவு முயற்சி எடுத்திருக்க முடியாது.



கொண்டிருந்தார் பாரதியார். அந்தப் பிறவிக் கவிஞனின் புகழ் பெற்ற பல கவிதைகள் இங்கிருந்த போதுதான் பாடப்பட்டன; பெரும் புகழ் பெற்றன.

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ஆம் நாளன்று இரவு 1.30-க்கு மாண்டு போனார் அந்தத் தேசியக் கவிஞர்; 'காலா, உனைச் சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன் காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன்' - என நெஞ்சு யர்த்திப் பாடிய அந்தப் பாட்டுக் குயிலின் உயிர் பிரிந்தது.

தங்கம்மாள், சகுந்தலா என்கிற இரண்டு பெண்மக்களை மட்டுமே பெற்றிருந்த அவருக்கு அப்போது 38 வயது 9 மாதங்கள் மட்டுமே நிறைவடைந்திருந்தது.

தமிழால் பாரதி தகுதி பெற்றார்; தமிழ், பாரதியால் தகுதி பெற்றது என்பது உண்மை - வெறும் புகழ்ச்சி யில்லை.

சென்னை திருவல்லிக்கேணியில் துளசிங்கப் பெருமாள் கோவில் தெருவில் உள்ள இல்லத்திலே பாரதியார் வாழ்ந்தார் என்றோ மல்லவா? பின்பு, இந்த இல்லத்தை எம்.எஸ். சான்ஜ்ஜெட்டி என்பவர் வாங்கி நவீன கட்டிடக் கலையுடன் தனது எண்ணம்போல மாற்றி அமைத்திருந்தார்.

இந்த வீட்டைத் தமிழக அரசு 1983-இல் ரூ.3 இலட்சம் செலவில் வாங்கிக் கையகப்படுத்தியது. பின்னர் அரசு ஆணை எண். 329 செய்தி மற்றும் சுற்றுலாத் (எம் & ஏ) துறை நாள்: 31.12.91-இல் பழைய கட்டடக் கலையுடன் 'சீர மைத்துப் புதுப்பிக்க ரூ.5,00,000/- வழங்கியது.

பாரதியார் வாழ்ந்த இல்லம் பழைய கட்டடக் கலையுடன் கூடிய நிழற்பட உதவியுடன், முகப்பு வேலைகள் கைதேர்ந்த சிற்பிகள் மூலம் மீண்டும் பழையபடியே புதுப்பிக்கப்பட்டது. இந்த இல்லத் தில் கீழ்த்தளம், முதல்மாடி மற்றும் கூரைத்தளத்தில் சிறப்புப் பழுது வேலைகள் செய்யப்பட்டன.

இந்த இல்லம் கீழ்த்தளம் மற்றும் ஒரு மேல்தளத்துடன் உள்ளது. கீழ்த்தளத்தின் முகப்புவராந்தாவில் பழைய கட்டடக் கலைக்கு ஒப்பாகக் கருப்பு நிறத் தரைக்கற்கள் பதிக்கப் பட்டுவிட்டன.

மத்திய அறையில் பாரதியார் அவர்களுடைய மார்பு அளவுச் சிலை, பளிங்குக் கற்கள் பதித்த பீடத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ளது.

கீழ்த்தளத்தின் பின்புறத்தில் 378 ச.மீ. திறந்தவெளி இடம் உள்ளது. இதில் 8 மீட்டர் நீளம் 4 மீட்டர் அகலத்தில் ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த இல்லத்தில் மாநகராட்சி குடிநீர் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. குடி தண் ணீரைச் சேமிப்பதற்கு ஒரு கீழ் நிலைத்தொட்டியும் அமைக்கப் பட்டுள்ளது.

இந்த இல்லத்தின் கீழ்த்தளப் பரப்பளவு 294 ச.மீ. மேல்தளப் பரப்பளவு 294 ச.மீ. ஆகும்.

இக்கட்டுமானப் பணி அக்டோபர் திங்கள் 1992-இல் துவக்கப்பட்டு மே திங்கள் 1993-இல் முடிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மகாகவி பாரதியின் நினைவாக - இவ்வில்லத்தைத்தம்பொற்கரங்களால் திறந்து வைத்தார்.

—பி.எல். ராஜேந்திரன்

## மேதோர் சொல்...

**சாதனை புரியும் புத்தகங்கள்**

**புத்தகங்களும் மனிதர்களைப் போலவே சாதனை புரிகின்றன. மிகப் பெரும் காரியங்களை மிகச் சில புத்தகங்கள் சாதித்து விடு கின்றன. மிகப் பல புத்தகங்கள் போன இடம் தெரியாமல் போய் விடுகின்றன.**

- வால்டேர்

**மனதுக்குப் பிடித்த புத்தகம்**

**என் மனதுக்குப் பிடித்த புத்த கங்களை மட்டும் என்னிடம் கொடுத்து என்னை வாழ்நாள் முழுவதும் சிறைப்படுத்தினாலும் நான் வருத்தப்பட மாட்டேன்.**

- மாஜினி.



# ஒற்றுமை உணர்வு இருந்தால் எந்த விடுதலையையும் எளிதில் பெற முடியும்!

—மாண்புமிகு முதல்வர்

'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் நடந்து 50 ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்று தொடங்கிய சுதந்திர வேள்வியின் பலனை, ஐந்தாண்டுகளிலே பெற்று, சுதந்திரக் காற்றை நாம் சுவாசித்து வருகின்றோம். நாடு விடுதலை அடைந்து 44 ஆண்டுகள் ஆயினும், விடுதலைக்கு வித்திட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை, மறவாமல் நினைவுகூர்கின்றோம். இந்த நினைவு நமது இரத்தத்தில், நமது சந்ததியினரின் உதிரத்தில், என்றென்றும் நின்று நிலைபெறத்தக்க, பெருமையும், புகழும் உடைய தனிச்சிறப்புக் கொண்டது.

'வெள்ளையனே வெளியேறு' என்ற வீர முழக்கம், நாடெங்கும் ஒலித்து, அதை அடக்க ஆங்கில ஏகாதிபத்தியம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டது. மக்களோடு இராணுவம் மோதியது. நிராயுதபாணியான மக்களைத் துப்பாக்கியால் இராணுவம் சுட்டுப்பொசுக்கியது.

அன்று பற்றி எரிந்த விடுதலைத் தீ, 5 ஆண்டுக்காலத்தில் பாரத மாதாவின் விலங்குகளை உடைத்து, விடுதலை தந்தது. அதன் பயனாகத்தான் இன்று, நம்மை நாமே ஆளும் நிலை ஏற்பட்டு, வல்லமை கொண்டு, வையகம் புகழ வாழுகிறோம்; புதிய வரலாறு படைக்கின்றோம்.

சுதந்திரப் போராட்டமே அரசியலுக்கு அப்பாற்பட்டது. எந்த ஒரு அரசியல் கட்சியும், அந்நியர் ஆட்சிக்கு ஆதரவு தந்ததாகச் சரித்திரம் இல்லை. ஒவ்வொரு கட்சியும் நமது நாட்டில் விடுதலைக்காகப் பல சோதனைகளை எதிர்கொண்டு போராடியுள்ளது.

நாட்டின் விடுதலை, தேசபக்தி கொண்ட ஒவ்வொருவருக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும். ஒவ்வொரு இந்தியருக்கும் இந்த வெற்றி சொந்தமானது. எனவே, எந்த ஒரு தனிப்பட்ட இனத்தினரோ, மதத்தினரோ இடத்தினரோ, மொழியினரோ இதற்குத் தனி உரிமை கொண்டாட இயலாது. அனைவருக்கும் பொதுவான இந்த வெற்றியினை, ஒற்றுமை உணர்வோடு நினைவுகூர்வது, நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தத் தியாக வேள்வியில், தங்களின் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளித்தவர்களை, நாம் இதயம் நிறைந்த நன்றியுணர்வோடு, தொடர்ந்து நினைவுகூரவும் கடமைப்பட்டுள்ளோம்.

எதற்காக, எந்த இலட்சியத்திற்காக, அந்த விடுதலை வீரர்களும், வீராங்கனைகளும் போராடினார்களோ அந்த இலட்சியத்தை, அதன் பலனை, நாம் இன்று அனுபவித்து வருகின்றோம்.

அடிமைத்தளை அகன்று, அன்னை நாடு விடுதலை பெற்றுவிட்டது. அரசியல் விடுதலையை அடைந்த நாம், சமூக, பொருளாதார விடுதலை பெற, இன்னும் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம்.

அன்று அந்த விடுதலையை, நமக்குப் பெற்றுத் தந்த அதே ஒற்றுமை உணர்வு, இன்று நம்மிடையே நிலவுமானால், நிச்சயமாக எந்த விடுதலையையும் நம்மால் எளிதாகப் பெற முடியும் என்பதை, இத்தருணத்தில் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆனால், சாதியால், மதத்தால், இனத்தால், இடத்தால் ஏற்படும் சச்சரவுகளால், நமது இலக்குகளை நாம் விரைவில் அடையமுடியாமல் தடுமாறிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதை, நாம் மறைக்க முடியாது. இந்த வேறுபாடுகளைக் களைந்து, நாம் அனைவரும் இந்தியத் திருநாட்டின் குடிமக்கள் என்ற ஒற்றுமை உணர்வோடு செயல்பட்டால், நமது வெற்றிகளை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

—'புரட்சித்தலைவியின் முழக்கம்-தொகுதி-2-விருந்து.





# 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத்தூண் திறப்பு விழா

வெள்ளையனே வெளியேறு!'...
அண்ணல் காந்தியடிகள்
நாட்டு மக்களுக்காக
எழுப்பிய
வீர முழக்கம்...
அன்று முதல்
ஆங்கிலேயர்களுக்கு
ஏற்பட்டதோ பெரும் கலக்கம்!
ஆம்.

இந்தியச் சுதந்திரப் போராட்ட வரலாற்றில் 1942 ஆகஸ்ட் திங்களில் நடந்த தேசிய காங்கிரஸ் மாநாட்டில் எடுத்த முடிவுகளே 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்திற்கு வித்திட்டன

1942 ஆகஸ்ட் திங்கள் 7,8 தேதிகளில் பம்பாய் கவுவாலியா மைதானத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டம் நடந்தது.

இதில்
வல்லபாய் படேல், 'அபுல்கலாம் ஆசாத், சரோஜினிநாயுடு மற்றும் பல முக்கியத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த மாநாட்டில் அண்ணல் காந்தியடிகள் உரையாற்றியபோது, 'வெள்ளையனே வெளியேறு' என்றும், "நாம் நமது கடமைகளைச் செய்ய வேண்டும் அல்லது செத்து மடிய வேண்டும்" என்றும் முழங்கினார். காந்தியடிகளின் தீர்மானத்தை பண்டித நேரு முன் மொழிய, அதனை சர்தார் வல்லபாய் படேல் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

காந்தியடிகளின் இந்த முழக்கம், இடியோசை போல நாடெங்கும் பரவியது. இந்த இடியோசையைக் கேட்ட ஆங்கிலேயர்கள் நாகம் போல் பதறினர். இந்த ஓசையைக் குறைப்பதற்கு வன்முறையைக்



கட்டவிழ்த்து விட்டனர். அப்பாவி மக்கள் ஆங்கிலேயர்களின் துப்பாக்கிக்குஇரையாகும்துர்பாக்கிய நிலைக்கு ஆளாகினர்.

ஆனால், அன்று உருவாகிய இந்த விடுதலை முழக்கத் தோட்டாக்கள், 5 ஆண்டுக் காலத்தில் பாரத மாதாவின் அடிமை விலங்குகளை உடைத்தெறிந்தன.

நாம் விடுதலை அடைந்தோம். அதன் பயனாகவே - நமக்குச் சுதந்திரக் காற்றில் சுவாசம் - அந்நியரிடமிருந்து தனித்து வாசம் என்ற நிலை கிடைத்தது.

வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்திருக்கின்றன. இந்தப் பொன் விழாக்காணும் இந்தியப் புரட்சியினை நன்றியுணர்வோடு நினைவு கூரும் வகையில், வெள்ளையனே வெளியேறு இயக்கப் பொன் விழாவினை இந்தியாவில் வேறெந்த மாநிலத் திலும் இல்லாத அளவிற்கு மிகச் சிறப்பாக தமிழகத்தில் நடத்திட, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டதின் விளைவாக, கடந்த ஆண்டு நடைபெற்ற பொன் விழாவில் பல்வேறு மாவட்டங் களில் இருந்து வருகை தந்தவிடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் பொன் னாடை போர்த்தி கௌரவித்தும், சுதந்திரப்போராட்ட வீரர்களின் ஓய் வூதியத் தொகையினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமளவு உயர்த்தி வழங்கினார். சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத் தைப் போற்றிடும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''வெள்ளையனே வெளியேறு இயக்கப்'' பொன் விழா நினைவுத்தூண் அமைக்க அடிக்கல் நாட்டினார்.

ரூ.3 இலட்சம் செலவில் வடிவமைக்கப்பட்ட இந்த நினைவுத்தூண், 'அடிமைத்தனம் எனும் இருளிலே அமிழ்ந்து கிடந்த நாடு, விடுதலை எனும் விடியலை நோக்கி சிறகடித்துப் பறக்கும் விதமாக மிக அழகிய முறையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இந்த 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா நினைவுத்தூண் திறப்பு விழா, அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 2.10.93 அன்று சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் இனிதே நடந்தேறியது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மேடையில் வைக்கப்பட்டிருந்த விசையை இயக்கி, நினைவுத்தூணைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், நினைவுப்பரிசை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத்தலைவர்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் தியாகிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கி நம்மையெல்லாம் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கச்செய்த மாபெரும் தலைவர்களெல்லாம் இவ்வையகத்தைவிட்டு வெளியேறிவிட்டாலும், அவர்கள் நம்மிடையே விட்டுச் சென்ற தன்னலம் கருதாப்பணி, தியாக உணர்வு மற்றும் 'தேசப்பற்று' போன்ற உணர்வுகள் நம்மை விட்டு வெளியேறாமல் கட்டிக் காப்போமாக!

— கரு. சண்முகசுந்தரம்



# அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்த நாள் விழா

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 2.10.93 அன்று, சென்னை மெரீனா கடற்கரை யிலுள்ள காந்தியடிகளின் திருவுரு வச்சிலை, பிரமாண்டமான மேடை யில் மலர்களால் அலங்காிக்கப்பட்டு அழகுறக் காட்சியளித்தது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காலை 10 மணி அளவில் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணி வித்து வணங்கினார்.

அவரைத் தொடர்ந்து, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் சேடபட்டி முத்தையா, மற்றும் அனைத்து அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள் மற்றும் முக்கிய பிர முகர்கள் மாலை அணிவித்து வணக்கம் செலுத்தினார்கள்.

பின்னர், அன்று மாலை காந்தி அடிகளின் 125-வது பிறந்த தின விழா, தமிழக அரசு சார்பில், சென்னை கிண்டி காந்தி மண்டபத் தில் மிகச் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

இந்த விழாவிற்கு மாண்புமிகு சட்டப் பேரவைத்தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமை வகித்தார். மாண்புமிகு







நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா நெடுஞ்செழியன் **அவர்கள்** மற்றும் செய்தி-விளம்ப்ரத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டனர்.

அடையாறு இசைப்பயிற்சிக் கல்லூரியிலிருந்து, செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா.சம்பத், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு. பா. செயப்பிரகாசம் **ஆகியோர்** உடனிருக்க, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் கொடியசைத்து, மாணவ மாணவியர்களின் ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவியர், மத ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற முழக் கங்கள் தாங்கிய அட்டைகளை ஏந்திக் குரல் எழுப்பியவண்ணம் காந்தி மண்டபத்தை வந்தடைந்தனர்.

பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பரிசுகள் வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. துரை. ராமசாமி, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. ஆர். இந்திரகுமாரி, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு.தென்னவன், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கா.ப. பட்டாபிராமன், மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆனந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

முன்னதாக, செய்தி-சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா. சம்பத், இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவின்றார்.

## உயிரினங்களைப் பாதுகாப்போம்!

**அ**க்டோபர் முதல் வாரம் வனவிலங்கு பாதுகாப்பு வாரமாக அனுசரிக்கப்படுகிறது. உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும், மனிதகுலம் உள்பட, ஒன்றொடு ஒன்று இயற்கையில் பின்னிப் பிணைந்துள்ளவையே. எனவே, உயிரினங் களைப் பாதுகாப்பது நமது கடமை. நமது சுய நலமும் இதில் உள்ளது. இதனை நினைவுறுத்தும் விதமாகவே வனவிலங்கு பாதுகாப்பு வாரம் அமைந்துள்ளது.

இங்கு இரண்டு சம்பவங்களை நினைவூட்டுவது பொருத்தமாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னர் தவளைக்கால் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது. ஏராளமான தவளைகள் கொல்லப்பட்டதால் பூச்சிகள் பெருகி, அவற்றின் தாக்குதலால் தானிய விளைச்சல் பாதிக்கப் பட்டது. பின்னர் தவற்றை உணர்ந்து தவளைக் கால் ஏற்றுமதிக்கான அனுமதி திரும்பப் பெறப் பட்டது. இதேபோல, தோலுக்காகப் பாம்புகள் கொல்லப்பட்டதால், எலிகளின் எண்ணிக்கை பெருகி, தொல்லைகளும் பெருகின. தானிய விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டது.

இயற்கையின் உயிர் மாலையில் ஏதோ ஒரு காரணமாகவே ஒன்றோடு ஒன்று கோக்கப் பட்டுள்ளது. எதாவது ஒரு உயிருக்குச் சேதம் ஏற் பட்டாலும், இறுதியில் பாதிக்கப்படுவது மனித குலமே!





# பெண்உரிமை காப்பீர்! சமூகநீதி காக்கும் நல்லெண்ணத் தூதுவராய்ச் செயல்படுவீர்!

**(பாளையங்கோட்டை, தூத்துக்குடி நகரங்களில் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் திறப்பு விழாக் களில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை)**

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலியில் உள்ள பாளையங்கோட்டையில்- மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார்.

10.10.93 அன்று காலை 10.30 மணியளவில் அங்கு வந்த அவரை அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், உள்துறைச் செயலர் திரு. கே. மலைச்சாமி, காவல்துறை பொது இயக்குநர் திரு. எஸ்.ஸ்ரீபால் ஆகியோர் மலர்ச்செண்டு வழங்கி மகிழ்வோடு வரவேற் றார்கள்.

இதற்கு முன்பாக- வெளியே திரண்டிருந்த மக்கள் ''புரட்சித்தலைவி வாழ்க...'' ''எங்கள் முதல்வர் வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி முழக்கினார்கள். அவர்களை நோக்கி இன்முகத் தோடு கரமசைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிலர் கொடுத்த மனுக்களைத் தாமே பெற்றுக்கொண்டு ஆவன செய்வதாக வாக்குறுதி யளித்தார்.

மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் செல்வி தங்கவல்லி தலைமையில், அனைத்து மகளிர் காவலர் அணிவகுப்பு நடத்தினர்.

அம்மரியாதையை முறைப்படி ஏற்றுக் கொண்ட





மாண்புமிகு முதல்வர் அவர்கள்- நெல்லை மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையக் கல்வெட்டறிவிப்பைத் திறந்து வைத்தார். அதன் பின், 'ரிப்பன்' கத்தரித்துவிட்டு உள்ளே சென்ற அவர், காவல் நிலையத்தைப் பார்வையிட்டார்.

குத்து விளக்கு ஏற்றிவைத்தார்.

இதன்பின், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்- அந்நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த பார்வையாளர் குறிப்பேடு புத்தகத்தில் பின்வருமாறு எழுதினார்.

### வாழ்த்தும் எதிர்பார்ப்பும்

**'மாநில அளவில், திருநெல்வேலி மாவட்டத்தில் 9-வது மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.**

**'தமிழ்நாட்டில் முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்ற 1992-ஆம் ஆண்டு ஏப்ரலில் என்னால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்தகைய மகளிர் காவல் நிலையங்கள் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதும், பயன்பட்டு வருவதும் பாராட்டத்தக்கதாகும். இத்தகைய காவல் நிலையங்கள்- குறிப்பாகப் பெண்களுக்கு நலம் சேர்ப்பவைகளாக அமைந்திருக்கின்றன.**

**'மகளிர் காவல் நிலையங்கள், உண்மையிலேயே துன்புறுவோரைக் கண்டறிந்து, அவர்களுடைய இன்னல்களை இன்முகத்தோடு கேட்டறிந்து எல்லாருக்கும் நலம் சேர்ப்பவைகளாகச் செயல்பட வேண்டும்.**

**'இங்கே இருக்கின்ற ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர்) முதல் காவலர் வரை அனைவருமே நேர்மையான முறையிலே கடமையாற்ற வேண்டும்; மக்களிடம் இவ்வாறு பணிபுரிந்து இங்குள்ளவர்கள் நன்மதிப்பைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை''.**

-பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளரிடம், பொது மக்களிடம் நடந்து கொள்ள வேண்டிய விதம்பற்றி அறிவுரை வழங்கினார்.

காவல் நிலைய ஆய்வாளர், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

## தூத்துக்குடியில் அனைத்து மகளிர் காவல் நிலையம்

10.10.93 அன்று மாலை 3.30 மணியளவில், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தூத்துக்குடி நகருக்கு வந்து சேர்ந்தார். வ.உ.சி. கல்லூரி





திடலில் அவர் பயணம் செய்த ஹெலிகாப்டர் தரையிறங்கியது. அவரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஹேமந்த்குமார் சின்கா, அரசு தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், காவல்துறை பொது இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால் முதலானோர் வரவேற்றார்கள்.

அங்கே, அனைத்து மகளிர் காவல் நிலையம் திறந்து வைக்க வந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழா நடக்குமிடத்திற்குக் காரில் பயணம் செய்தார். சாலையின் இருமருங்கும் வண்ணச் சீருடையோடு வரிசையுற நின்றிருந்த மாணவ-மாணவிகள், தம் கையிலிருந்த பல வண்ணக் கொடிகளை வனப்புற வீசி மகிழ்ச்சி கரமான வரவேற்புத் தெரிவித்தார்கள்.

அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டடத்திற்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வரை, எதிரே திரண்டிருந்த ஏராளமான மக்கள் ''தங்கத் தலைவி வாழ்க...'' ''எங்கள் தலைவியே வருக'' ''தமிழக முதல்வர் வாழ்க'' என்றெல்லாம் வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றார்கள்.

மகளிர் காவல் நிலையத்தின் முன், மகளிர் காவலர் ஆய்வாளர் செல்வி சுதாராணி தலைமையில் மாண்புமிகு முதல்வருக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

தூத்துக்குடி மகளிர் காவல் நிலையக் கல் வெட்டைத் திறந்து வைத்தபின், வாயிலில் கட்டப்பட்டிருந்த வண்ண 'ரிப்பனை' பலத்த கைத்தட்டலுக்கிடையே வெட்டியபின் உட்புகுந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், உவகையோடு குத்து விளக்கை ஏற்றி வைத்தார். சுற்றிப் பார்த்தார்.

அங்கிந்த பார்வையாளர் ஏட்டில் குறிப் பெழுதினார்.

அதன்பின் மகளிர் காவல் நிலைய ஆய்வாளர்-மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

காவல் நிலையத்தின் அருகே அமைக்கப்பட்டிருந்த அழகிய மேடைக்கு வந்தார் மாண்புமிகு முதல்வர்; மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ், அரசு தலைமைச் செயலாளர், காவல் துறை பொது இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் உடன்வந்தார்கள்.

'எங்கள் இதய தெய்வமே வருக...' 'தர்மத்தாயே வருக' என்ற வாசகங்களோடு விழா மேடையருகே வரவேற்புத் தட்டிகள் கட்டப்பட்டிருந்தன.

## வரவேற்புரை

காவல் துறை பொது இயக்குநர் திரு. எஸ். ஸ்ரீபால், வரவேற்புரையாற்றுகையில்- ''சுதந்திர இந்தியாவில்- நல்ல பல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி, மக்களின் மகத்தான ஆதரவைப் பெறுபவராக நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்களே விளங்கி வருகிறார். சட்டம் ஒழுங்கு மற்றவர்களுக்கு மட்டுமல்ல; அதைக் கட்டிக் காக்கும் காவல் துறையினருக்கும் பொருந்தும் என்பதை வலியுறுத்தும் அவர்களை இவ்விழா மேடையில் வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

-இதையடுத்து மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.




விழா முடிவில்- காவல்துறை துணைத்தலைவர் (டி.ஐ.ஜி) திரு. தினமணி அவர்கள் நன்றி கூறுகையில்- ''தம்முடைய ஓய்வற்ற உழைப்பிற்கு இடையிலும், எங்கள் அழைப்பை ஏற்று இங்கே வருகைதந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர் பெருமக்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; இப்பகுதி மக்கள் இந்தக் காவல் நிலையத்தை நன்முறையில் பயன் படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

## சிதம்பரனார் மாவட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடக்க விழா - முதல்வர் உரை

''சிதம்பரனார் மாவட்டத்திற்கான, 'அனைத்து மகளிர் காவல் நிலையத்தை' - தூத்துக்குடி நகரில் துவக்கி வைத்து, உங்களையெல்லாம் நேரில் சந்திப்பதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சென்ற ஆண்டு மழையாலும், வெள்ளத்தாலும், இந்தப் பகுதி பாதிக்கப்பட்டிருந்த போது, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட்டு, பாதிக்கப்பட்டிருந்த மக்களை நேரில் கண்டு, ஆறுதல் கூறிட ஓடோடி வந்தேன்.

ஆனால் இன்று ஒரு மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைத்து, மலர்ந்த முகத்துடன் கூடி இருக்கின்ற இம்மாவட்டத்து மக்களாகிய உங்களையெல்லாம் மன மகிழ்ச்சியுடனும், மன நிம்மதியுடனும் சந்திப்பதில், உண்மையிலேயே என் மனம் பூரிப்பு அடைகின்றது.

### என்னுடைய மனவேதனை!

உங்கள் அன்புச் சகோதரியின் தலைமையில் அமைந்த இந்த அரசு, மகளிரின் மேம்பாட்டிற்காகவும், அவர்களின் பாதுகாப்பிற்காகவும், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதில், ஆரம்பத்தில் இருந்தே மிகுந்த தீவிரம் காட்டி வருகின்றது.

எழுத்தளவிலும், பேச்சளவிலும், மகளிரின் நலனுக்கெனப் பல உரிமைகள்

### ஊனமுற்றவரின் உவகை!

தூத்துக்குடியில், அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் திறந்து வைக்க வருகை தந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்.

விழா மேடையில், சிறப்புரை நிகழ்த்தி முடித்த அவரிடம்- பொதுமக்கள் தம்முடைய மனுக்களை அளிக்க அனுமதிக்கப்பட்டனர். கால்கள் ஊனமுற்ற ஓர் இளைஞர் முதலாவதாகத் தமது மனுவை அளித்தார்; கொடுத்துவிட்டு உடனே திரும்பிய அவனை ''கொஞ்சம் பொறுடா தம்பி'' என்ற முதல்வர்- புகைப்படக்காரர்களைப் பார்த்துப் புன்னகையுடன் ''இவனை ஒரு படம் எடுத்துக்குங்க'' என்றார்.

அவ்வளவுதான், உவகை பெருக உணர்ச்சிமயமாகி விட்டான் அந்தச் சிறுவன். படம் எடுக்கப்பட்ட மறுவினாடியே, அவனுக்குத் தனது ஊனம் மறந்து போயிருக்க வேண்டும். ஊன்றுகோலோடு, மேடையை விட்டுக் கீழே அப்படியே குதித்தானே பார்க்கலாம்- அருகே நின்ற காவலர் ஒருவர் பாய்ந்து பிடித்து அவனை அடிபடாமல் காப்பாற்றினார்!



வழங்கப்பட்டிருந்தாலும், நடைமுறை வாழ்க்கையில் அந்த உரிமைகள், அவர்களுக்குப் போய்ச் சேருகின்றனவா, என்பதை ஆராய்ந்து பார்க்கும் போது- இன்னும் முழுமையாக இல்லை என்பதை, நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அந்த உண்மைச் சூழ்நிலையின் அடிப்படையில்தான். காலம் காலமாகத் தங்களுக்கு இழைக்கப்படும், கொடுமைகளையும் தீமைகளையும், ஒரு தியாக உணர்வோடு சகித்துக்கொண்டு, விரக்தியுடன் வாழ்க்கையை நடத்தி வரும். பல தாய்மார்களையும், சகோதரிகளையும் காணும்போது, என் மனம் வேதனை அடைகிறது.

மகளிர் தங்களுடைய சொந்தக் காலில் நிற்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, ஒரு புறம் எங்கள் அரசு மேற்கொண்டு வருவதோடு, இன்னொருபுறம், அவர்களுக்குச் சமூக நீதி கிடைப்பதற்கும், பல முயற்சிகள் செய்து வருகின்றது. முதன் முதலாகக் காவல்துறையில், பெண் காவலர்கள் பணியாற்றத் தொடங்கியபோது, அவர்கள் பெண் கைதிகளைக் கண்காணித்தல், பாதுகாப்புப் பணி, வழிக் காவல் பணி, தொலைத் தொடர்பு சாதனங்களை இயக்குதல் போன்ற சாதாரணப் பணிகளில் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வந்தனர்.

இருப்பினும், ஆண்களுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்கள், இராணுவம் உட்பட அனைத்துத் துறைகளிலும், எல்லாப்பணிகளையும் மேற்கொண்டு, அனைவரும் பாராட்டும்வண்ணம் பணி புரிந்து, சாதனைகளைப் படைத்துவரும்போது; தமிழகக் காவல்துறையில், பெண் காவலர்கள் மட்டும் சாதாரணப் பணிகளைச் செய்து வருவதை, என் மனம் ஏற்கவில்லை. முழுமையான அனைத்துக் காவல் பணிகளிலும், அவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தை, வெகு நாட்களாகவே கொண்டிருந்தேன்.

மேலும், சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் உள்ள மகளிர்க்கு, ஏற்படும் தனிப்பட்ட பிரச்சினைகளைச் சட்டத்தின் துணை கொண்டு களையும் வண்ணம், மகளிருக்கெனத் தனியே காவல் நிலையம் அமைத்தால், அது சிறப்பாகச் செயல்படும் என்று, நான் திடமாக நம்பினேன். அந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகத் தான், இன்றைய தினம் தமிழகத்தில், ஒவ்வொரு காவல் மாவட்டத்திற்கும், மகளிராலேயே முழுமையாக நிர்வகிக்கப்படும், ஒரு 'அனைத்து மகளிர் காவல் நிலையம்', அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த அமைப்புகள், சமுதாயத்தில் மகளிருக்கு இழைக்கப்படும் பல்வேறு கொடுமைகளைக் களைந்து, மகளிர் வாழ்வில், ஒரு மறுமலர்ச்சியினை ஏற்படுத்த வழிவகுக்கும், என்று உறுதியாக நம்புகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும்,



வசதியில்லா ஏழை எளிய சகோதரிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க உதவும் இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், திறம்பட செயல்பட, அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களின் முக்கியத்துவத்தை, அனைவரும் உணர வேண்டும் என்பதற்காக, நானே நேரில் சென்று, ஒவ்வொரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தையும் திறந்துவைத்து வருகிறேன்.

சென்னை நகரில் மட்டும், மூன்று அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும்; மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு என தனித்தனியே இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும்; பர்கூர், தர்மபுரி, கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தனித்தனியே நான்கு மகளிர் காவல் நிலையங்களையும் திறந்துவைத்தேன்.

## நன்முறையில் பயன்படுத்திக் கொள்க

இன்று தொடங்கப்பட்டுள்ள இந்தக் காவல் நிலையம் தமிழகத்தின் 10-வது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும். இந்த மாவட்டத்தில் வாழும் பெண்கள், குறிப்பாக, வாய்ப்புகளும் வசதிகளும் இல்லாமல், சமுதாயத்தின் அடித்தளத்தில் வசிக்கின்ற தாய்மார்களும், சகோதரிகளும், நன்முறையில் இக் காவல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும், எனக்கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இக்காவல் நிலையத்தில் பணிபுரிபவர்கள், இந்த மாவட்டத்துப் பெண்களின் உரிமைகளைக் கட்டிக் காத்து, அவர்களுக்குச் சமூக நீதி வழங்குகின்ற, நல்லெண்ணத் தூதுவர்களாகச் செயல்பட வேண்டும் என்ற, எனது எதிர்பார்ப்பினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

—'ராஜு'

# "அரசு அளிக்கும் உதவிகள் தொடக்கமேயன்றி முடிவு அல்ல; இதை ஆதரவாகக் கொண்டு முன்னேறுவீர்!"



## கோயில்பட்டி விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை

சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஏழை எளிய மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை நேரில் வழங்கிச் சிறப்பித்தார். இதற்கான விழா, 10.10.93 ஞாயிறன்று நண்பகல் 12 மணியளவில் கோயில் பட்டி நகரில் உள்ள இலட்சுமி மில் மேனிலைப்பள்ளித் திடலில் நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் 30,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

### ஊர்ச் சிறப்புகள்

கோயில்பட்டி நகருக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்த ஹெலிகாப்டர் தளத்திலிருந்து விழா நடக்குமிடம் வரை- வழிநெடுகிலும் அழகிய வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. மாடமாளிகை, கூடகோபுரம், கோயில் போன்ற பல அமைப்புகளில் இருந்த அவை யாவும் தஞ்சாவூர் கீற்று வேலைப்பாடுகளால் எழிலோடு விளங்கின.

'வெற்றித் தலைவியே வருக...' 'வீரத் திருமகளே வருக...' 'எங்கள் முதல்வரே வருக...' 'எங்கள் இதயத் துடிப்பே வருக...' என்பன போன்ற வாசகங்கள் அவற்றை அழகு செய்தன. அதேபோல வரவேற்புச் சுவரொட்டிகள் வண்ண வண்ண முதல்வர் உருவப் படங்களோடும் வாழ்த்துச் செய்திகளோடும் ஊரெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தார் சார்பில்- கோட்டை கொத்தளம் போன்றிருந்த வரவேற்பு வளைவு அழகோடு திகழ்ந்தது.

### விழா மேம்பாடு

விழா நடக்குமிடத்தில், மிகப் பெரிய மாநாடுகளுக்கு அமைப்பது போலப் பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் உட்புறம் வெள்ளைத் துணி பரப்பி, மணக்கும் பூச்சரங்கள், காகித மலர்-இலைக் கொத்துகள் கவினுறத் தொங்கவிடப்பட்டிருந்தன.

முதலமைச்சரும் பிறரும் அமரும் மேடையின் பக்கவாட்டில்- மலைப் பாறைகள் கிடப்பதுபோல அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடைக்கு வரும் வழிநெடுக பல நிறக் கொடிகள் பட்டொளி வீசிக் கொண்டிருந்தன. சிறிது தூரத்தில் உருவாக்கப்பட்டிருந்த செயற்கை நீரூற்றில் கத்தரிப் பூ வண்ணத் தண்ணீர்ச் சிதறல். வழி நெடுகச் சிவப்புக் கம்பள விரிப்பு!

தொலைவில், 'எங்கள் தலைவியே என்றும் முதல்வரே வருக வருக!' என்கிற வாசகத்தோடு ஒரு ராட்சதப் பலூன் மஞ்சள் நிலாப் போல விண்ணில் பறக்க விடப்பட்டிருந்தது.

மேடையின் உள்ளும் புறமும்



மலர்ச் சரங்கள் அணி செய்தன; இடையிடையே கம்பளி நூல் குஞ் சங்கள் கட்டப்பட்டிருந்தது அற்புத மாகக் காட்சியளித்தது. எங்குபார்த் தாலும் சரவிளக்குகள்.

டாக்டர் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா, அறிஞர் அண்ணா ஆகியோர் உருவப் படங்கள் மேடையில் அணி செய்தன.

மேடைக்கு வலப்புறம் அமைக்கப் பட்டிருந்த சிறிய மேடையில், 'கே.டி.சி. மெல்லிசைக் குழுவினர் இசைநிகழ்ச்சி இனிதே தொடர்ந்தது.

விழாவிற்கு- மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற-நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள், அரசு-காவல்துறை உயர் அதிகாரிகள், இலட்சக்கணக்கான மக்கள் வருகை தந்திருந்தார்கள்.

கோயில்பட்டியின் முதலாவது நகராட்சிமன்றத் தலைவர் என்ற பெருமைக்குரிய பெரியவர் திரு. ஈ.வெ.அ. வள்ளிமுத்து அவர்கள்-நடக்கவியலாத முதுமை நிலையிலும் இருவர் கைத்தாங்கலோடு இவ் விழாவிற்கு வந்திருந்தார்.

## வரவேற்புரை

சரியாக 12.15 மணிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து சேர்ந்தார். கூட்டத்தார் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினார்கள்.

'புரட்சித்தலைவி வாழ்க...' 'பொன்மனத் தலைவி வாழ்க...' 'பாரதிகண்ட புதுமைப்பெண் வாழ்க'- என்பன போன்ற வாழ்த்து முழக்கங்கள் தரையதிரச் செய்தன.

நிகழ்ச்சி தொடங்கியது. செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. இரா.சம்பத் அவர்கள் நிகழ்ச்சி களை வரிசைப்படுத்தித் தொகுத் துரைத்தார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள், நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றார்.

சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஹேமந்த் குமார் சின்ஹா வரவேற்புரையாற்றினார். ''ஏழை எளிய மக்களின் துயர் துடைப்பதில் ஓடோடிவந்து உதவிக் கரம் நீட்டும் தயாள குணம் பெற்ற வர் நம் முதல்வர். சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்ட மக்கள் பெரும் புயலால் பாதிக்கப்பட்ட போது அவர் பேருதவி புரிந்ததே இதற்குச் சான்றாகும். இரண்டு மாவட்ட மக்களின் சார்பிலும் அவர் களை வரவேற்பதில் பேருவுவகை கொள்கிறேன்'' என்றார் அவர்.

பின்னர், இரு மாவட்ட ஆட்சித் தலைவர்களும்- மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் பெரு மக்களுக்கும் பொன்னாடை வழங்கி யும், போர்த்தியும் மரியாதை செய் தார்கள்.

கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாது, பந்தலுக்கு வெளியேயும் திரண்டிருந்த மக்களைக் கட்டுப்படுத்த இயலாமல் காவல் துறையினர் தவித்தனர்; அதைக் கவனித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடையிலிருந்தவாறே கையமர்த்தினார்; அவர்கள் அமைதி யடைந்தனர்.

## வாழ்த்துரைகள்

தொகுதிச் சட்டமன்ற உறுப் பினர் திருமதி சியாமளா தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''வஞ்சனைகளையெல்லாம் வகையாக வென்று, குறையாத புகழ்பெற்றிருக்கிறார் நமது முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள். மாவட்டத் தலைநகர்கூட இல்லாத இந்தச் சிற்றூரில், கோயில்பட்டியில் இந்த விழா நடக்கச் செய்து தனிப் பெருமை உண்டாக்கியிருக்கிறார் முதல்வர். கோயில்பட்டி-சீவலபேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறை வேற்றி, பாரதி கண்ட புதுமைப் பெண்ணான அவர்கள்- பாரதி பிறந்த இந்த மண்ணுக்குத் தனிச் சிறப்பை உண்டாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்''

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. நாகூர் மீரான் அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது:

''இந்த மாவட்டத்தைச் சேர்ந்த நாற்பதாயிரம் குடும்பங்களிலே விளக்கேற்றி வைக்க வருகை தந் திருக்கும் தங்களைக் கார் உள்ளள வும், கடல் உள்ளளவும் இந்த மாவட்டத்து மக்கள் துளிக்கூட மறக்கவே மாட்டார்கள். நெல்லை என்றாலே தொல்லை என்று எண் ணுகிறவர்களும் இருக்கிறார்;



அன்னையே, தாங்கள்தான் தாய்ப் பாசத்தோடு வந்து இம்மாவட்ட மக்களுக்கெல்லாம் இதய பூர்வமாக நல்ல பல உதவிகளை ஆற்றி உவகை கொள்கிறீர்கள். அத்தனைக் குடும்பமும் நன்றியுணர்வோடு காலகாலத்திற்கும் தங்கள் புகழ் பாடிக்கொண்டிருக்கும் என்பது நிச்சயம்''.

மாண்புமிகு **அறிநிலையத்துறை அமைச்சர் திரு. டி.வி. நடேசன் பால்ராஜ்** அவர்கள் தம் வாழ்த்துரையின்போது கூறியதாவது:

''கொடை என்றாலே அதற்குப் பெயர் பெற்றவன் கர்ணன்தான் என்று சொல்லுவார்கள்; ஆனால், அவன்கூட தனது அரண்மனைக்கு வந்தவர்களுக்குத்தான் அள்ளிக் கொடுத்தான். ஆனால் நம்முடைய புரட்சித்தலைவி அவர்களே ஏழை எளிய மக்களை நாடு முழுதும் தேடிச் சென்று, உரிய உதவிகளை நேரிலேயே அளித்துத் துன்பம் நீக்கி வருகிறார்கள். ஆகவே, கர்ணனை விட இவர்கள் புகழ் நீடித்து நிலைத்திருக்கும் என்பது உறுதி''.

மாண்புமிகு **சமூகநலத்துறை அமைச்சர் திருமதி இந்திரகுமாரி** அவர்கள் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டதாவது:

''நம்முடைய முதல்வர் அவர்களை- தர்மதேவதை... ஆறுகோடி மக்களும் பூஜிக்கத்தக்க தெய்வம் என்பேன் நான். ஆதிதிராவிடர்கள் கோயிலுக்குள் செல்லலாம் என்றுதான் காந்தியார் சொன்னார்; ஆனால் இவர்களோ, ஆதிதிராவிடர்கள் அர்ச்சகர்களாகவும் ஆகலாம் என்றே தெரிவித்துப் பெருமை கொண்டிருக்கிறார்கள். தமக்கு மனுச் செய்தவர்களைத் தேடிப் பிடித்து உதவுகிற சிறப்பு நம் புரட்சித்தலைவி ஒருவருக்கே உண்டு; முன் எப்போதும், இந்த வகையிலே முதலமைச்சர் அலுவலகங்களும்கூட இவ்வளவு சுறுசுறுப்பாக இயங்கியது கிடையாது''.

மாண்புமிகு **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. எஸ்.முத்துசாமி** அவர்கள் வாழ்த்துரைச் சுருக்கம் வருமாறு:

''இந்த இயக்கத்தைக் கட்டிக் காக்கும் இமயமாக நாங்கள் எங்கள் புரட்சித்தலைவி அவர்களை மதிக்கிறோம்; இந்த இமயத்தின் முன்னே நின்று பேசுவதென்றாலே எங்களுக்கு ஒருவித அச்சம் ஏற்படுவது உண்டு. இங்கே உள்ள மக்களுக் குத் தாமே நலத்திட்ட உதவிகளை வழங்க அவர்கள் வந்திருக்கிறார்களென்றால்- உதவிகளெல்லாம் உரிய மக்களுக்கு உடனடியாகப் போய்ச் சேருகிறதா என்று நேரிலே பார்த்துப் பரவசப்படும் குணம்தான் அதற்குக் காரணம். சிலபேர், பிரச்சினைகள் உருவாகிறபோது சுருண்டு படுத்து விடுவார்கள்; ஆனால், நம்முடைய முதல்வர் அவர்களோ, பிரச்சினைகள் உருவாகிறபோதுதான் மிகுந்த சுறுசுறுப்போடு செயல்படுவார். இதற்காகவே அவர்களை நாம் வாழ்த்தி வணங்கலாம்''.



தமது வாழ்த்துரையில், மாண்புமிகு **சட்டப்பேரவைத் தலைவர் திரு. இரா. சேடபட்டி முத்தையா** அவர்கள் தெரிவித்த கருத்தாவது:

''இந்த மண்ணுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. இது வீரம் செறிந்த மண்; வீரபாண்டியக் கட்டபொம்மன், புலித்தேவனெல்லாம் இங்கேதான் பிறந்தார்கள். இந்த மண் விவேகம் செறிந்த மண்; பாரதியார், வ.உ.சி.யெல்லாம் இங்கேதான் பிறந்தார்கள். இதற்காகவே, வெள்ளையர்கள் இந்த மண் என்றாலே அஞ்சுகிற காலம் ஒன்று இருந்தது. இவ்வகையான தனிச்சிறப்பெல்லாம் இருந்தபோதும்- இந்த மண், ஆண்டவனால் கைவிடப்பட்ட மண் என்று கூறுவதுண்டு. அதேபோல இந்த நாட்டை ஆண்டவர்களும் இந்த மண்ணைக் கைவிட்டதுண்டு. இப்போது நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த மண்ணிலே கால் வைத்திருக்கிறார்கள். இந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் அரிய பல உதவிகளை இவ்விழாவிலே வழங்கவிருக்

கிறார்கள். ஆகவே, இனி இப்பகுதி மக்களுக்கெல்லாம் இன்பம்தானே தவிர, துன்பமில்லை''.

—இதன்பின், மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழாச் சிறப்புரையாற்றினார். கூடியிருந்த மக்களெல்லாம் குற்றாலம் அருவியிலே குளித்தெழுந்தாற்போல அதைக்கேட்டு மகிழ்ந்தார்கள்.

முதல்வர் உரை முடிந்த பிறகு, சிதம்பரனார் மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மக்களுக்கெல்லாம் நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

**நன்றியுரை**

விழாவின் நிறைவாகத் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். ஜெயராமன் நன்றியுரையாற்றினார்.

''வறுமையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாட்டம் நீக்கும் வகையிலே திட்டமிட்டு ஆட்சி நடத்தி வருகின்ற பெருமைபெற்றவராக நம்முடைய முதல்வர் அவர்கள் விளங்கி வருகிறார். இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு உயர் அதிகாரிகளுக்கும்- இரண்டு மாவட்ட மக்களின் சார்பிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்''.



இவ்விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சிதம்பரனார்-திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினர்.

இலட்சுமி மில் மேனிலைப் பள்ளி மாணவ மாணவிகள் சார்பில்- மகாராட்டிர மாநிலப் பூகம்ப நிதிக்காகப் பத்தாயிரம் ரூபாய் நிதி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கப்பட்டது.

## அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா — முதல்வர் உரை

''வரலாற்றுச் சிறப்புக்கள் பலவும், இயற்கை எழில் வனப்புகள் எண்ணற்றதுவும், ஒருங்கே அமையப் பெற்ற, இந்த இரண்டு தென் தமிழ் மாவட்டங்களுக்கு வருகை தந்து, பிரசித்தி பெற்ற கோவில்பட்டி நகரில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு, எனது பாசத்திற்குரிய உங்களையெல்லாம் சந்தித்து மகிழும் நல் வாய்ப்பு, இன்று எனக்குக் கிடைத்ததை எண்ணி, நான் பெரிதும் மகிழ்கிறேன்.

சிதம்பரனார் மாவட்டம், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆகிய இந்த இரு மாவட்டங்களுக்கும் பொதுவாக, ஒரே மேடையில் ஒருமித்த உணர்வோடு,

இன்று நடக்கும் இந்த அரசு விழா, உண்மையிலேயே, இந்த இரு மாவட்டங்களும், நிர்வாகக் காரணங்களுக்காக இரண்டாகப் பிரிக்கப்பட்டு இருப்பினும், அவை உணர்வுகளால் ஒன்றுபட்டு இருக்கின்றன என்ற உண்மையை நமக்கெல்லாம் உணர்த்திக் கொண்டிருக்கிறது என்பதை, இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**தியாக பூமி இது**

தன்னுடைய பெயரிலேயே, வீரத்

**அரசு நலத்திட்ட உதவிகள்**

**மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 10.10.93 அன்று கோயில்பட்டியில் நடைபெற்ற விழாவில் - திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம் வருமாறு:**

**பயன்பெற்ற ஆண்கள் 11,714.**

**பயன்பெற்ற பெண்கள் 8,293, ஆக மொத்தம் 20,007.**

**வழங்கப்பட்ட கடன் ரூ.1,111.63.**

**வழங்கப்பட்ட மானியம் ரூ.903.38, ஆக மொர்த்தம் ரூ.2,015.01 (ரூபாய் இலட்சத்தில்).**

**சிதம்பரனார் மாவட்ட மக்களுக்கு அளிக்கப் பட்ட நலத்திட்ட உதவிகள் விவரம் வருமாறு:**

**பயன்பெற்ற ஆண்கள் 12,628.**

**பயன்பெற்ற பெண்கள் 7,538, ஆக மொத்தம் 20,166.**

**வழங்கப்பட்ட கடன் ரூ.1,437.19.**

**வழங்கப்பட்ட மானியம் ரூ.687.11, ஆக மொத்தம் ரூ.2,134.30 (ரூபாய் இலட்சத்தில்).**

திருமகன் வீரபாண்டிய கட்ட பொம்மனைக் கொண்டிருக்கும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், வீரத்தின் விளை நிலமாக நிலவியது என்றால், அது மிகையாகாது. தன்னிகரில்லாத் தன்மானச் செம்மல், பாளை நாட்டுச் சிங்கம், கட்டபொம்மன், அன்று எழுப்பிய போர்க் குரல் தான், ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, இந்தியாவிலேயே எழுப்பப்பட்ட முதல் புரட்சிக் குரல், என்பதை அறிந்து, பெருமை கொள்ளாத இந்தியர்கள் எவரும் இருக்கமுடியாது.

வீரபாண்டிய கட்டபொம்மன், என்ற பெயரை உச்சரித்த மாத்திரத்திலேயே, கோழைகளின் நாடி நரம்புகளில் கூட, வீரம் முறுக்கேறும்; அவர் தம் சோம்பிய நெஞ்சங்களில் கூட ஆற்றல் ஆர்ப்பரிக்கும். அத்தகைய வீர மறவர் பிறந்து, வளர்ந்து சரித்திரம் படைத்து, மறைந்த தியாக பூமி தான் இது.

அதே போன்று, செக்கிழுத்த செம்மல் என்று, எல்லோராலும் புகழப்பட்ட வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், வாழ்ந்து மறைந்த மண் இது. அந்நியரின் ஆதிக்கம், அனைத்துத் துறைகளிலும் ஊடுருவி, மேலோங்கியிருந்த காலத்தில் - ஒரு தமிழ் வணிகக் குடும்பத்தில் பிறந்து, தனது விடா முயற்சியாலும், உண்மையான நாட்டுப் பற்றாலும், போற்றத் தக்க நெஞ்சுரத்தாலும், சுதேசி கப்பல் ஒன்றினையே வங்கக் கடலில் ஓட்டி, தமிழனின் பெருமையைப் பாரெங்கும் பரவச் செய்த, வ.உ. சிதம்பரனார் தோன்றிய பூமி இது.

நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரிய, வ.உ. சிதம்பரனார் போன்று, நாட்டுப் பற்றும், பொருளாதாரத் தீர்க்க தரிசனமும் கொண்ட நல்லோர் பலர், இன்று நம்மிடையே இருப்பார்களேயானால், ஜப்பான் போன்ற பொருளாதார வளர்ச்சியுற்ற நாடுகளையே, நம் நாடு வளத்தில் பின்னுக்குத் தள்ளியிருக்கும் என்று, நான் உறுதியாகக் கூறுவேன்.

இத்தகைய வணக்கத்திற்குரிய பெருமகனார்கள் மட்டுமன்றி, தனது புரட்சிக் கவிதைகளின் சாகா வரம்பெற்ற வரிகளில், சுதந்திர இந்தியாவின் மாண்பினைக் கனவு கண்ட மகாகவி பாரதியார், மற்றும் வீர வாஞ்சிநாதன், புலித் தேவன், வ.வே.சு. அய்யர், போன்ற தன்னலமற்ற தலைவர்களையும், நாட்டுக்கு ஈந்ததுதான் இந்த மண்.

### பெருமைப்படுகிறேன்

இப்படி, சிறப்புக்கள் பலவற்றினைப் பெற்ற, இந்த இரு மாவட்டங்களைச் சேர்ந்த பெருமக்களுக்குப் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்குவது குறித்து, நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், இன்று வரை, மக்கட் பணியே தனது தலையாய கடமை என்பதனை நன்குணர்ந்து, இந்த



அரசு உறுதியோடு செயல்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த உண்மையைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக, ஏழைகள், ஆதரவற்றோர், முதியோர், கைம்பெண்டிர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் மக்கள், போன்றோரின் துன்பங்களை, துயரங்களை, வாழ்க்கைப் பிரச்சினைகளை, அரசு முன்னின்று, முடிந்த வரை தீர்த்து வைக்க வேண்டும், என்ற உயரிய கொள்கையை, நாங்கள் கடைப் பிடித்து வருகின்றோம், பல நடைமுறைச் சிக்கல்கள் இருப்பினும் கூட, இந்தக் கொள்கையை உங்கள் அரசு, சிறிதும் வழுவாமல் பின்பற்றி வர வேண்டும் என்பதில், நானும், எனது அமைச்சரவையும், உறுதியோடு நின்று செயல்பட்டு வருகின்றோம் என்பதை, இங்கே பெருமிதத்தோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

ஓர் அரசினையும், அதன் செயல்பாடுகளையும்பற்றிக் குறிப்பிடுகையில், பொதுவாக 'அரசு இயந்திரம்' என்று, பலரும் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். இங்கு, 'இயந்திரம்' என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதை, நான் குறை கூறவில்லை. ஆனால், அந்த 'அரசு இயந்திரத்தை' இயக்குபவர்கள், ஓர் இயந்திரமாக, மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளையும், புரிந்து கொள்ளும் சக்தியின்றி, இயந்திர கதியில் இயங்குவதைத் தான், என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

### முதன்மையான கடமை

வாக்குகளை அளித்து, தங்களுக்குப் பிடித்தமான அரசினைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்திவிட்டு, தங்களுடைய வாழ்க்கையில் நிலவிக் கொண்டிருக்கும் வறுமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை, பொருளாதாரச் சீர்கேட்டினை, மற்றும் எண்ணற்ற அன்றாடப் பிரச்சினைகளை, ஓரளவேனும் தாங்கள் தேர்ந்தெடுத்த அரசு, களைய முற்படாதா என்று தான், சமுதாயத்தில், பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும், எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை, நான் நன்கு அறிவேன். அத்தகைய ஏழைகளின் துயரினைத் துடைப்பதைத் தான், என்னுடைய கடமைகளில் முதன்மையானதாகக் கருதுகின்றேன்.

ஆகவே, வருங்கால சமுதாயத்திற்கு உதவக் கூடிய வகையில், தொலை நோக்குத் திட்டங்களைத் தயாரித்துச் செயல்படுத்துவது, உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகை செய்வது, பொருளாதார முன்னேற்றத்திற்கு அடித்தளம் அமைப்பது போன்ற கடமைகள், நீண்ட காலத் திட்டங்களாகவே பெரும்பாலும் இருக்கின்றன.

இவை ஓர் அரசின் இன்றியமையாத கடமைகளாக இருப்பினும் கூட, மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அவர்களின் பல்வேறு இன்னல்களையும், உடனடியாகத் தீர்த்து வைக்கவேண்டும்,

என்ற மனிதாபிமானக் கடமையினை, எந்த ஒரு மக்கள் அரசும் புறக்கணிக்கக் கூடாது, என்ற கொள்கையைத்தான், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய உத்தமத் தலைவர்கள், தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்றி வந்தார்கள். அந்தப் புனிதத் தலைவர்களின் உன்னத கோட்பாடுகளுக்கு ஏற்பவே, உங்கள் சகோதரியின் இந்த 'மக்கள் அரசும்' இயங்கி வருகின்றது என்பதை, இந்தத் தருணத்தில் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்களைச் சந்திப்பது, அவர் தம் குறைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பது, போன்ற ஒரு முதலமைச்சரின் கடமைகளிலிருந்து, சிறிதும் வழுவாமல், மக்கட் பணி ஆற்றிட வேண்டும், என்ற குறிக்கோள்களோடுதான், தேச விரோத சக்திகளால், என்னுடைய உயிருக்குத் தீங்கு விளையக் கூடும், என்ற எச்சரிக்கையையும் மீறி, நானே என் அன்புக்குரிய மக்களை, சென்னையில் குறிப்பிட்ட தினங்களில், மாவட்ட வாரியாகச் சந்தித்து, அவர்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, பரிசீலித்து வந்தேன்.

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட மக்களையும், இந்த முறையில் சந்தித்து, அவர் தம் குறைகளைக் களைய, அரசு நிர்வாகம் மூலம், துரித நடவடிக்கைகளை நான் மேற்கொண்டதை, ஏழை எளியோர் வாழ்த்தினார்கள்.

### என் மன நிறைவு

அப்படி, என்னிடம் மனு அளித்தவர்களில், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து, மாவட்ட வாரியாக அவர்களை, அரசு செலவிலேயே, சென்னையில் உள்ள கோட்டைக்கு வரவழைத்து, 36,438 பயனாளிகளுக்கு, 51 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை, எனது கைகளாலேயே வழங்கி, மிக்க மன நிறைவை நான் அடைந்தேன்.

அடுத்து, மாவட்ட வாரியாகச் சென்று, இத்தகைய நலத்திட்ட உதவிகளை, நானே நேரில் பல்லாயிரக்கணக்கான பயனாளிகளுக்கு, வழங்கவேண்டும் என்று முடிவு செய்து, தற்போது மாவட்டம் தோறும் சென்றுவருகின்றேன். அந்த வகையில், இதுவரை, கோவை, தர்மபுரி, தென்னார்க்காடு-வள்ளலார், மற்றும் விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் சென்று, 37,000-க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு, 29 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்கி மகிழ்ந்தேன்.

தற்போது, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய இரு மாவட்டங்களுக்கு வருகை புரிந்து, 40,173 பயனாளிகளுக்கு, 41 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்புடைய அரசு நலத்திட்ட உதவிகளை, வழங்க இருக்கின்றேன்.

இன்று, பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறும் பயனாளிகள் அனைவருக்கும், எனது ஆலோசனை ஒன்றினைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எத்தகைய முறைகளிலெல்லாம், ஓர் அரசு மக்களுக்குப் பணியாற்றிக் கடமைப்பட்டு இருக்கின்றது என்பதைப் பற்றி, இதுவரை நான் பேசினேன். அதே சமயத்தில், பயனாளிகளாகிய உங்கள் அனைவருக்கும், நான் ஒரு செய்தியினைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

### உழைப்பீர்; உயர்வீர்!

அரசு இன்று உங்களுக்கு அளிக்கும் இந்த உதவி, ஒரு சிறு தொடக்கமேயின்றி, இதுவே முடிவல்ல. பற்றிப் படரும் படர் கொடியானது, எத்தகைய சிறு கிளையின் ஆதரவு கிடைத்தாலும், அதனைப் பற்றிக் கொண்டு, மென்மேலும் உயர உயர வளர்ந்து, பெரும் செடியாக, எவ்வாறு படர்ந்து வியாபிக்கின்றதோ; அது போல, இன்றைய தினம் நீங்கள் பெறுகின்ற இந்த உதவியினை, ஓர் ஆதரவாகக் கொண்டு, உங்கள் உழைப்பு என்னும் மூலதனத்தை இட்டு, கடினமாக உழைத்து, வாழ்க்கைப் போராட்டத்தை, உள்ள உறுதியோடு எதிர் நோக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், என்ற என்னுடைய அன்பு வேண்டுகோளினை, உங்கள் அனைவரது வாழ்விலும், வளங்கள் அனைத்தும் பெருக வேண்டும், என்று எனது நல்வாழ்த்துக்களையும், தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நேரமின்மை காரணமாக, இன்று இந்த விழா மேடையில், சில பயனாளிகளுக்கு மட்டுமே, நானே என் கைகளால், நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றேன்.

இங்கே பல்லாயிரக்கணக்கில் குழுமியுள்ள, எஞ்சிய பயனாளிகள் அனைவருக்கும், இதே விழா அரங்கில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நலத்திட்ட உதவிகளை வழங்க இருக்கின்றார்கள். நீங்கள் அனைவரும் அவரவர்கள் அமர்ந்திருக்கும் இடங்களிலிருந்து, அவரவர்க்குரிய உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும், என்ற வேண்டுகோளினை விடுத்து, இன்றைய விழா இனிதே நடைபெற, பாடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றியினையும் உரித்தாக்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்."

—பி.எல்.ஆர்.



# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

TNSC BANK

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 2.9.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25% w.e.f. 1.7.1993 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 9.00% |
| | For 271 DAYS and above but upto 364 days | 9.50% |
| | For 1 YEAR and above | 10.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE





# "நமது மாநிலக் காவல்துறையினர் திறமையாக மக்கள் மதிக்கத்தக்க வகையில் பணிபுரிந்து வருகின்றனர்!'

## நெல்லையில் மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 9.10.93 அன்று திருநெல்வேலிக்கு வருகை தந்தார். சிறந்த சேவை புரிந்த காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத் **துறை, ஊர்க்காவல்படை துறையினருக்குத் தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழாவில் பங்கேற்கவே அவர் வந்தார்.**

அவருடைய வருகையையொட்டித் திருநெல்வேலி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.

சுவரெங்கும் மட்டுமல்ல; பெரிய மரங்களின் உடலிலும் கூட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. 'பரணி பாயும் நகருக்கு வருகை தரும் தரணி புகழும் தலைவியே வருக'... 'காவியத் தலைவியே வருக'... 'தமிழகத்தின் திருவிளக்கே வருக'... 'புரட்சித் தலைவியே வருக'... என்பன போன்ற வாசகங்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் உருவப் படங்களும் அந்தச் சுவரொட்டியை அணி செய்தன.

சாலையில் - அதிலும் குறிப்பாகப் பாளையங்கோட்டைச் சாலையில் பத்தடிக்கு ஒரு 'வளைவு' (ஆர்ச்) இருக்கலாம்; அவ்வளவு அமைக்கப்பட்டிருந்தன.

தஞ்சைப் பெரிய கோயில்... ஜப்பான் கோபுரம்... கட்டபொம்மன் கோட்டை... ஈபிள் கோபுரம்... என ஒவ்வொன்றும் 'இது மேலா அது மேலா' என்று திகைக்கச் செய்வதாக அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் 'மாதர்குல மாணிக்கமே வருக'... 'பொன்மனத் தலைவியே வருக'... 'தமிழர் நலம் காக்கும் தலைவியே வருக'... 'காவிரித் தாயே வருக'... 'இதய தெய்வமே வருக'... என்பன போன்ற வாசகங்கள், பல கோணங்களில் உள்ள மாண்புமிகு முதல்வரின் உருவப் படங்கள் இடம்பெற்றிருந்தன.

சாலையின் இருமருங்கும் நெருக்கமாக நிறுத்தப்பட்டிருந்த கம்பங்களில் குழல் விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன; ஆங்காங்கே தலைவிரித்து நின்ற மரங்களில் கொத்துக் கொத்தாகச் சர விளக்குகள் பல நிறங்களில் ஒளி சிந்தின.

எங்கு பார்த்தாலும் ஒலிபெருக்கிகளில் **திரைப்படப் பாடல்கள்... கவிதை** நடை வரவேற்பு முழக்கங்கள் இழைந்தன.

**ஊர் மக்களின்** முகமெல்லாம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்தன.

### ஹெலிகாப்டரில்...

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், பாளையங்கோட்டையில் உள்ள ஆயுதப்படைப் பயிற்சியாளர் திடலில் சரியாக 1.15 மணியளவில் ஹெலிகாப்டரில் வந்திறங்கினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆட்சித்தலைவர் திரு ஆர். ஜெயராமன், சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, டெல்லியில் உள்ள தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜக்கையன், மாண்புமிகு தமிழ்நாடு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், காவல்துறை பொது இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திருமதி வஸந்தாதேவி போன்ற பலரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பூச்செண்டு வழங்கியும், பொன்னாடைகள் வழங்கியும் வரவேற்பளித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் தோழி திருமதி சசிகலா அவர்களும்

உடன் வந்திருந்தார்.

பொதுமக்களின் வாழ்த்தொலி விண்ணை எட்டியது!

### சாலையும் மணத்தது

திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஹெலிகாப்டர் தளத்தைச் சூழ்ந்து நின்ற மக்களை நோக்கி மகிழ்வோடு கரமசைத் தார். பிறகு அங்கிருந்து விருந்தினர் மாளிகைக்குப் பயணமானார்.

சாலையின் இருபுறமும் மாணவ-மாணவிகளும், பெரியவர்களும், தாய் மார்களும், இளைஞர்களும் பல்லாயிரக் கணக்கில் அணிவகுத்து நின்றனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் காரைக் கண்டதும் அவர்களெல்லாம் மகிழ்ச்சி மேலீட்டால் ''முதல்வர் வாழ்க''... ''புரட்சித்தலைவி வாழ்க''... என்றெல் லாம் எழுச்சி முழக்கம் எழுப்பினார்.

மாணவ-மாணவிகள் உற்சாகத்தோடு தூவிய பலவகை மலர்களால் பாளையங் கோட்டைச் சாலையே மணந்திடலா யிற்று.



### முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா

முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா நடைபெறவிருந்த திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கை நோக்கி, நண்பகல் முதலே மக்கள் சாரிசாரியாக வரத் தொடங்கினார்கள்.

விளையாட்டரங்கின் சுற்றுப்புறம் கோட்டை மதில்போல அமைக்கப் பட்டிருந்தது. அதன் நுழைவாயிலில், 'தமிழ்நாட்டின் காவல் தெய்வமே வருக' என்று எழுதி, மாண்புமிகு தமிழக முதல்வரின் ஓவியம் வண்ணமுறத் தீட்டி வைக்கப்பட்டிருந்தது.

உள்ளே அமைக்கப்பட்டிருந்த காலரி, மூன்று மணிக்குள்ளாகவே நிரம்பி வழிந்தது; அரங்கின் வெளியே இருந்த உயரமான மரங்களின் கிளைகளிலும் இளைஞர்களின் தலைகளைக் காண முடிந்தது.



'வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீரங்கொள் கூட்டம்'... என்ற கவிஞர் இளந்தேவனின் கம்பீரமான குரலோடு நேர்முக வர்ணனை தொடங்கியது; டாக்டர் சுதா சேஷய்யன் அதைத் தொடர்ந்திடலானார்.

### குதிரைப்படை வரவேற்பு

விழா நிகழிடத்திற்குச் சரியாக 4 மணிக்கெல்லாம் வந்து சேர்ந்தார் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். குதிரைப்படை வீரர்கள் அவர்களை வரவேற்று அழைத்து வந்தார்கள்.

அங்கே வருகைதந்திருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ''புரட்சித்தலைவி வாழ்க''... ''தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்க''... என்பனபோன்ற முழக்கங் களை உணர்ச்சிப் பெருக்கோடு மண்ண திர முழங்கினார்கள்.

அத்திடலின் ஓர்புறம் அமைக்கப்பட் டிருந்த அளவான - அழகான மேடை யருகே வந்திறங்கினார் மாண்புமிகு முதல்வர்; உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி, காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால், கூடுதல் இயக்குநர் திரு டபுள்யூ பி. தேவாரம் முதலான காவல்துறையின் உயர் அலு வலர்களை அவருக்கு முறைப்படி அறி முகப்படுத்தி வைத்தார்.

பின்னர் - திறந்த ஜீப்பில் ஏறி அத்திடலில் திரண்டிருந்த மக்களின் வரவேற்பை ஏற்றுக் கொள்ளும் வகையில் சிற்றுலா வந்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதைத் தொடர்ந்து, அணி வகுத்து நின்ற காவல்துறை - மகளிர் காவல் துறையினர் அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

### காவல்துறை அணிவகுப்பு

அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. வெங்கட்ராமன், மற்றும் உயர் அதிகாரிகளும் வந்திருந்த இவ்விழாவில் - காவல்துறையினரின் அணிவகுப்புத் தொடங்கியது. அம் மரியாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

இந்த அணிவகுப்பில் - மகளிர் காவல் துறையினரும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டக் காவல்துறையினரும், நீலகிரி மாவட்டக் காவல்துறையினரும், சிறப்புக் காவல் படையினரும் திரு. ஜாபர்சேட் தலைமையில் அழகுபட அணி வகுத்துச் சென்றார்கள்.

மகளிர் காவல்துறையில் முதன் முதலாகத் துணைக் கண்காணிப்பாள ராகப் பதவி பெற்றுள்ள செல்வி வனிதா, அணிவகுப்பின் துணைத் தளவாயாக வந்தார்.

### வரவேற்புரை

இந்நிகழ்ச்சியில் காவல்துறைப் பொது இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் தம்முடைய வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:

''சென்ற ஆண்டு காவிரிக் கரையிலே அழகியதோர் அணிவகுப்பை நடத்தி விட்டு - பாலாற்றங்கரையிலும் பழநி மலைச் சாரலிலும் வெற்றி நடைபோட்டு விட்டு - பொருநையாற்றங்கரைக்கும் பொதிகை மலைச் சாரலுக்கும் வருகை தந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை வரவேற்பதில் பெரிதும் மகிழ்கிறேன்.

''சட்டத்தை மிதிப்பவர்களுக்கு வேங்கையாகவும், மதிப்பவர்களுக்குக் கீதமாகவும் விளங்கக் கூடியவர் நமது முதல்வர்; காவல்துறையிலே புதுமையான திட்டங்கள் பல தீட்டி விரைந்து நிறைவேற்றும் தொலைநோக்குச் சிந்தனை பெற்றவரும் கூட. காவல் நிலையத்திற்குப் புண்பட்டு வருவோரிடமும் பண்பாட்டு உணர்வோடு நடந்துகொள்ள வேண்டும் என்பது அவர்களின் பெருவிருப்ப மாகும். அதனடிப்படையிலே தமிழகக் காவல்துறையினர் இதய சுத்தியோடு நடந்துகொள்ள வேண்டும். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டில், காவல் துறையில் நல்லபல சாதனைகள் நிகழக் கூடும் என்ற அறிகுறி தென்படுகிறது.

''உடுக்கை இழந்தவன் கைபோல - மகாராட்டிரத்தில் பூகம்ப அபாயத்தால் அல்லலுறும் மக்களின் இடுக்கண் களைய நிதி திரட்டி நேசக்கரம் நீட்டியிருக்கிறார் நம் முதல்வர் அவர்கள். அந்தக் கரத்தை வலுப்படுத்தும்வகையிலே இவ்விழாவில் தமிழகக் காவல்துறையின் சார்பில் முதல் தவணையாக ஐந்து இலட்சம் ரூபாய் வழங்குகிறோம்.''

### பாராட்டுரை

உள்துறைச் செயலாளர் திரு கே. மலைச்சாமி அவர்கள், தம்முடைய பாராட்டுரையிலே இவ்வாறு தெரிவித்தார்:

''விழா என்றாலே அடைந்த வெற்றி கண்டு பூரிப்பதும், ஆற்ற வேண்டிய கடமைகளைக் கணக்கெடுப்பதும் ஆகும். அந்த வகையிலேயே இந்த விழாவும் நடைபெறுகிறது. காவல்துறையினர் பெற்ற வெற்றிகளுக்காக விருதுகள் வழங்க விருக்கிறார் நம்முடைய முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள்.

''தமிழ் மக்கள் வீரத்திற்கும் விவேகத் திற்கும் பெயர் பெற்றவர்கள். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் வீரத்தில் சிறந் திருந்ததை தமிழிலக்கியங்கள் மூலம் நாம் அறியலாம். சீறிவந்த புலியதனை ஒரு பெண் முறத்தினாலேயே அடித்து விரட்டினாள் என்கிறது இலக்கியம். நம் முதல்வர் அவர்களும் விடுதலைப் புலி களை விரட்டி விரட்டியடித்த வீராங் களையாகவே விளங்கிவருகிறார்.

''என்னவாக இருந்தாலும் சரி - தமக்குச் சரி என்று பட்டதை எடுப்பேன், தொடுப்பேன், முடிப்பேன் என்கிற வகையில் - தூங்காமை, கல்வி, துணிவு, கடமை என்றெல்லாம் பெற்ற முதல்வ ராக இவர் விளங்குகிறார்; காவிரிப் பிரச்சினையானாலும் கச்சத்தீவுப் பிரச் சினையானாலும் வினைத் திட்பத்தோடு செயல்பட்டு வருகிறார். இந்தச் சமயத்தில் நமக்கெல்லாம் இவர் முதலமைச்சராக வாய்த்தது மிகப் பெரிய பொருத்தமாகும்.

''போலீசாரின் பொற்காலம் எது என்று கேட்டால், காவல்துறையினரான நீங்களெல்லாம் அது இதுதான் என்று



நிச்சயமாகச் சொல்லுவீர்கள். காவல் துறையினரைக் கறைப்படுத்தும் விதமாகச் சிலர் திரைப்படம் பிடிக்கிறார்கள்; சிலர் எழுதிவருகிறார்கள். அந்த நிலைமை மாறவேண்டும்.

''பத்தாண்டுக் காலத்தில் செய்ய வேண்டிய சாதனைகளை இரண்டே ஆண்டுகளில் சாதித்த பெருமை நம் முதல்வருக்கு இருக்கிறது. மற்ற மாநிலங்கள் அமளிதுமளிபடுகிற போது, நம் மாநிலம் அமைதிப் பூங்காவாக விளங்கி வருகிற தென்றால் முதல்வர் அவர்களின் பாராட்டத்தக்க பணிகளே அதற்குக் காரணமாகும்''.

### முதல்வர் பதக்கங்கள்

வரவேற்புரையும், பாராட்டுரையும் முடிந்தபின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் - காவல்துறை, தீயணைப்புத் துறை, ஊர்க்காவல்படை, சிறைத்துறை, ஆகியவற்றைச் சேர்ந்த 90 பேருக்கும் சிறந்த சேவைக்கான முதலமைச்சர் பதக் ககங்களை, மாண்புமிகு தமிழக முதல்வர் பதக்கங்களையும் அளித்துச் சிறப்பித்தார்.

முதலமைச்சர் பதக்கம் பெற்றவர் களில் சென்னை மாநகராட்சி ரகசியப் போலீஸ் பிரிவு ஆய்வாளர் திரு பாபு லட்சுமணனும் ஒருவராவார். மாநகராட்சி ரகசியப் பிரிவினர் முதலமைச்சர் பதக்கம் பெறுவது இதுவே முதன்முறை.

அதன்பின், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாச் சிறப்புரை ஆற்றினார்.

அதையடுத்து - அணிவகுப்பு நடத்திய காவல்துறைப் பிரிவு கூட்டுக் குழுவினர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்கள்.

விழாவில் விருது பெற்றோருடன் • மாண்புமிகு முதல்வர் அவர்கள் குழு வினர் புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

விழாவுக்கு வருகைதந்து சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில்,

---

## நெல்லை காணாத அற்புத அலங்காரம்!

**திருநெல்வேலி மாநகரமே- மாண்புமிகு முதல்வர் வருகையை யொட்டி ஒளி வெள்ளத்தில் மூழ்கியிருந்தது; எங்குபார்த்தாலும் ஒலிபெருக்கிகள் இசை முழக்கிக் கொண்டிருந்தன. எங்கு பார்த் தாலும் வசீகரம்மிக்க வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.**

**இரவெல்லாம்- ஊர்மக்கள் ஏதோ திருவிழாக் காலம் போல இந்த வியத்தகு வேடிக்கைகளைக் கண்டவாறே நகர வீதிகளிலே வலம் வந்து கொண்டிருந்தார்கள்.**

**ஒரு பெரிய குடும்பத்தின் முன் னாலே சென்ற பெரியவர் ஒரு வரிடம் எதுவும் தெரியாததுபோல நாம் கேட்டோம்- ''என்னங்க... பஸ் கிடைக்காம நடந்து போறீங் களா?''**

**பெரிய சிரிப்போடு அவர் சொன்னார்- ''என்னன்னு கேட் டிய- பஸ்சுங்களா?... கெடச்சாலும் ஏறுவமான்னேன்! நானும் அறுபதெ தாண்டிட்டேன்; இத்தினி வருஷ காலத்துல இந்த திருநெல்வேலில.. அடடா! இவ்வளவு அலங்காரம், அற்புதம் இருந்ததே இல்லிங்க! அதான்... இப்பிடி... வேடிக்கை பார்த்துகிட்டே போறம்க!''**



காவல்துறை பொது இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் நினைவுப் பரிசு வழங்கி மகிழ்ந்தார்.

## நெருப்புக் கணைகள்

இதனையடுத்து 5.30 மணியளவில், காவல்துறையினரின் வீரதீர சாகச நிகழ்ச்சிகள், அண்ணா விளையாட்டரங்கை ஆரவாரத்துக்குள்ளாக்கியது.

மாண்புமிகு முதல்வரின் பெயரில், முதன் முதல் காவல்துறையில் உருவாக்கப்பட்டுள்ள மோட்டார் சைகிள் வீரர்கள் 30 பேர், 'நெருப்புக் கணைகள்' (Jaya's Flaming Arrows) என்ற பெயரில் மயிர்க்கூச்செரியும் விளையாட்டுகள் பலவற்றை மோட்டார் சைகிளில் பயணம் செய்தவாறே செய்து காட்டினர். தருமபுரி காவல்துறை ஆய்வாளர் திரு சோமசுந்தரம் தலைமையில், பெங்களூரில் பயிற்சி பெற்றவர்கள் புதுக்கோட்டை; தருமபுரி, மதுரை, வட ஆர்க்காடு மாவட்டக் காவலர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

இவர்கள் வீரதீர விளையாட்டுக்களை மாண்புமிகு முதல்வர் அவர்களும் அவ்வப்போது கைத்தட்டி ரசித்துப் பார்த்தார்.

இதைத் தொடர்ந்து - கூடாரக் கலைப்பு, துப்பறியும் நாய் அறிமுகம், 62 பேர் பங்கேற்ற 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' உயர்ந்த மனிதர்கள், நாகப் பாம்பு, காவடி, கரக ஆட்டம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள், தீப்பந்த அணிவகுப்பு - பந்தயங்கள் மூலமே 'LONG LIVE CM'... 'WELCOME TO CM'... 'THANK YOU CM'... 'வணக்கம்'... போன்ற சொற்கள் வடிவமைப்பு எல்லாம் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு நடைபெற்றன.

காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை, ஊர்க்காவல் படையினர் ஆகியோருக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பதக்கம் வழங்கிய இந்த விழா நிறைவு நிகழ்ச்சியாக - இரவு 8 மணியளவில் வாண வேடிக்கை நிகழ்த்தப்பட்டது.

## தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் வழங்கும் விழா - முதல்வர் உரை

“ஒவ்வொரு மனிதனும், எண்ணத்தால் உயர்ந்து, செயலால் சிறந்து, சாதனைகளைப் படைக்க விரும்புகிறான். அதற்குத் திறமை, வாய்ப்பு வசதிகள் மட்டுமின்றிச் சுற்றுச் சூழ்நிலையும் ஒரு காரணமாக அமைகிறது. எனவே இயற்கையாக அமைந்த திறமையோடு, இனிதாக அமைந்த சூழ்நிலை, ஒருவரின் பணித் திறத்தை மேலும் உயர்த்துகிறது. அந்த வகையில்தான், ஒரு தனி மனிதனிடம் காணப்படும் திறமைகளை ஊக்குவித்து, மேம்படுத்தி, உற்சாகமாகச் செயல்பட வைக்கும்போது, அவரிடம் மறைந்துள்ள அபரிமிதமான தனி ஆற்றல், சிறப்பாக வெளிப்படுகிறது.

## பதக்கமும் பணமுடிப்பும்

அந்த உயரிய எண்ணத்தில் தான், காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் வீரதீர செயல்களைப் பாராட்டியும் - கொடுத்த பணியை இதய சுத்தியோடு செயல்படுத்தும் கடமையுணர்வையும், போற்றிப் புகழ்ந்து, அரசாங்கமே அவர்களுக்காக விழா எடுத்து, பதக்கமளித்தும், பண முடிப்பு வழங்கியும், மகிழ்ச்சி கொள்கிறது.

பொதுவாக சென்னை மாநகரத்திலே மட்டும், இந்தப் பதக்கம் அளிக்கும் விழா நடைபெறுகின்ற மரபை மாற்றி, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில், இந்த விழாவினைக் கொண்டாட ஏற்பாடு செய்ய ஆணையிட்டேன். பல்வேறு மாவட்ட மக்களை, நேரடியாக நான் சென்று பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பை, இந்த விழா ஏற்படுத்திக் கொடுப்பதோடு, அம்மாவட்ட மக்களும் இது போன்ற சிறப்பான விழாக்களை, நேரில் கண்டுகளிக்க ஓர் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பதே, எனது நோக்கம். சென்ற ஆண்டு திருச்சியில் நடைபெற்ற இந்த விழா, இந்த ஆண்டு இன்று நெல்லைச் சீமையிலே, கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டு புயலாலும் வெள்ளத்தாலும், நெல்லைச் சீமையைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட நேரத்தில், அவர்களின் துயர் துடைக்க ஓடோடி வந்தேன். அப்போது மக்களை மகிழ்ச்சியான சூழ்நிலையில் பார்க்க இயலவில்லை. மன அமைதியோடு, மக்கள் மகிழ்ச்சியோடு இருக்கும் நேரத்தில், அவர்களைச் சந்திக்கின்ற வாய்ப்பினை, இந்தப் பதக்கம் வழங்கும் விழா எனக்கு ஏற்படுத்திக் கொடுத்ததில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

## மாவட்டத்தின் தனிச்சிறப்பு

பாரோர் போற்றும் பண்பாட்டிற்கும், நீண்ட நெடிய பாரம்பரியத்திற்கும், திறமைக்கும் பெருமைக்கும் உரித்தான மாவட்டம், திருநெல்வேலி-

கட்டபொம்மன் மாவட்டம். திரு நெல் வயல்களை வெள்ளம் தாக்காது, வேலி அமைத்துக் காத்த நெல்லையப்பர் எழுந்தருளி, ஆசி வழங்கி, அருள் பாலிக்கும் பெருமைக்குரிய மாவட்டம் இது.

தாமிரபரணியும் பாபநாசமும், இம்மாவட்டத்தை மக்கள் வாழ்வில், பின்னிப் பிணைந்துவிட்ட ஒரு அம்சமாகும். சுதந்திர உணர்வு இந்த மண்ணிற்கு மிக அதிகம் என்பதை, இந்த மண்ணில் அவதரித்த, மா பெரும் மனிதர்களின் வரலாற்றிலிருந்து, புரிந்துகொள்ள முடியும்.

அந்நிய ஏகாதிபத்தியத்தையும், அந்நிய ஆட்சியையும், ஆங்கிலேய அடக்குமுறை தத்துவத்தையும் எதிர்த்து, வீரப் போராட்டம் நடத்திய வீர பாண்டிய-கட்டபொம்மன், ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை, அதற்கு முன்னரே எதிர்த்துப் போரிட்ட மாவீரன் புலித்தேவன், சுதந்திர வேள்வியில் தன்னையே தாரை வார்த்துக் கொடுத்த வாஞ்சிநாதன், ஆகியோர் அவதரித்தது,இந்த நெல்லைச் சீமையிலேதான். சுதந்திரத் தாகம் என்னும் தியாக வேள்விக்காக, அகிம்சைப் போருக்காக, மக்களைத் தயார் ,செய்த கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், சுப்பிரமணிய சிவா ஆகியோர், இந்தப் பகுதிக்குச் சொந்தக்காரார்கள்.

வீரத்திற்கும் தீரத்திற்கும் அடிப்படையாய் விளங்கும் இந்த மண்ணில், இன்று வீரச் செயல் புரிந்தோரையும், விழுமிய பணி ஆற்றியோரையும், பாராட்டிப் பெருமைப்படுத்துவது, பொருத்தமான செயல் என்றே கருதுகிறேன்.

இந்த விழாவில், காவல்துறையைச் சேர்ந்த 65 பேருக்கும், தீயணைப்புத் துறையைச் சேர்ந்த 10 பேருக்கும், சிறைத் துறையைச் சேர்ந்த 10 பேருக்கும், ஊர்க்காவல் படையைச் சேர்ந்த 5 பேருக்கும், மொத்தம் 90 பேருக்குப் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு வரை, வீரதீரச் செயல் புரிந்தோருக்கு பதக்கம் வழங்கி, 3000 ரூபாய் பண முடிப்பும் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தப் பண முடிப்பு, 3000 ரூபாயிலிருந்து 4000 ரூபாயாக, இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கடமையுணர்வோடு சீரிய பணியாற்றும் தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோருக்குப் பதக்கத்துடன் வழங்கி வந்த பண முடிப்புத் தொகை, 1000 ரூபாயிலிருந்து 1500 ரூபாயாகவும், ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோருக்கு வழங்கி வந்த தொகை, 2000 ரூபாயிலிருந்து 2500 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது என்பதையும், மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## நல்லவை நடந்தே தீரும்

இந்த விழா, சற்றுக் காலம் தாழ்த்தி நடைபெற வேண்டிய



சூழ்நிலை ஏற்பட்டாலும், நாம் நினைத்ததைச் சாதித்துவிட்டு, மக்கள் சக்தியின் மகத்தான ஆற்றலை வெளிப்படுத்திய வெற்றி உணர்வுடன், இவ்விழா நடைபெறுவது, 'காலம் கடந்தாலும் நல்லவை நடந்தே தீரும்', என்ற இயற்கையின் நியதியை, யாரும் மாற்ற முடியாது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

இந்த இனிய விழாவில், பதக்கங்களையும் பண முடிப்புகளையும் பெறும், கடமை வீரர்களையும், வீராங்கனைகளையும் வீரதீரச் செயல் புரிந்தோர்களையும், உங்கள் அனைவரின் சார்பாக, உள மாரப் பாராட்டி மகிழ்வதில், பேருவகை அடைகிறேன்.

தான் ஏற்றுக்கொண்ட பணியை, செவ்வனே செய்து முடிக்கவேண்டும் என்பதற்காக, உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றிய நல்ல நெஞ்சங்களை, நாடு போற்றினால்தான், நாடு வளம் பெறும்; வல்லவர்கள் ஏற்றம் பெறுவார்கள்; வளரும் தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக, அந்த நிகழ்ச்சி அமையும்.

கடமை உணர்வும், ஒழுக்கமும் அடிப்படைத் தேவைகளாகக் கொண்டு செயல்படும், காவல்துறை போன்றவற்றில் பணிபுரிபவர்கள், ஊக்கத்துடனும் ஆக்கத்துடனும் செயல்பட, இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது, என்பதை நன்கு அறிவீர்கள்.

இன்று பாராட்டுப் பெறும் அனைவரும், மேலும் சிறப்புடன் பணியாற்றிட, இந்த விழா வழி வகுக்கும் என்று நம்புகிறேன். அதே நேரத்தில், இந்தத் துறையில் பணி புரியும் மற்றவர்களும், இவர்களைப் போல் சிறப்பாகச் செயல்பட்டு, அவர்களும் பதக்கமும், பண முடிப்பும் பெறுவதற்கு, இந்த விழா ஒரு தூண்டுகோலாக, ஆரம்பமாக அமையும் என்று கருதுகிறேன்.

## காவல்துறையின் பணிகள்

அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்தி, மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் உத்திரவாதம் கொடுப்பதில், காவல்துறையின் பங்கு மிக முக்கியமானது என்பதை, அனைவரும் நன்கு அறிவீர்கள் வளர்ந்து வரும் சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப, காவல்துறையின் பணிகளும் மாறி வருகின்றன. சட்ட-ஒழுங்கை நிலைநாட்டி, அமைதி காக்கவேண்டும்.

குற்றங்கல் நடக்காமல் தடுக்க வேண்டும். நடந்த குற்றங்களைக் கண்டுபிடித்து, குற்றவாளிகளைத் தண்டிக்கத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். போக்குவரத்து இடையூறு இன்றி இயங்கவேண்டும்; நாட்டைத் துண்டாட நினைக்கும் தீய சக்திகளை, சமூக விரோத சக்திகளைச் சமாளிக்க வேண்டும்; என ஒரு வித்தியாசமான கால கட்டத்தில், காவல்துறையினர் பலதரப்பட்ட பணிகளைச் சுமக்க வேண்டிய நிலைக்கு இன்று ஆளாக்கப்பட்டு உள்ளார்கள்.

காவலர்களின் பணி கடுமையானது, சிக்கலானது; சில நேரங்களில் ஆபத்தும் நிறைந்தது.

## பெருமிதம் அடைகிறேன்

பாதிக்கப்பட்டோரும், பரிகாரம் தேடுவோரும், வெவ்வேறு கோணங்களில் காவல்துறையினரைப் பார்த்து, அவர்கள் அளிக்கும் விமரிசனங்களையும், காவல்துறையினர் தாங்கிக் கொண்டாக வேண்டும்.

குறைகள் சில இருந்தாலும், இன்றைய சூழ்நிலையில், மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமது மாநிலக் காவல்துறை யினர், திறமையாக, மக்கள் மதிக்கத் தக்க வகையில் பணிபுரிந்து வரு கின்றனர் என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் பெரு மிதம் அடைகிறேன்.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியை நிறைவேற்றும் போது, காவல்துறையினர் எதிர் நோக்க வேண்டிய சங்கடங்களையும், சாவல் களையும் சமாளிப்பதற்கு ஏதுவாக, இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. காவலர்கள் இல்லை, வாகனங்கள் இல்லை, ஆயுதங்கள் இல்லை, சாதனங்கள் இல்லை, போதிய ஆவணங்கள் இல்லை, புதிய நோக்கும் இல்லை, என்ற குறைகளை எல்லாம் குறுகிய காலத் தில் மாற்றி, இந்தத் துறைக்குத் தேவையான முக்கியத்துவத்தைக் கொடுத்து, வளம் பெறச் செய்திருக் கின்றேன்.

காவலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு என்றே, தமிழ்நாடு சீருடைப் பணி யாளர் தேர்வு வாரியம், (Tamil Nadu Uniformed Services Recruitment Board) ஒன்றை உருவாக்கி, ஒரே நேரத்தில் 10,000-க்கும் மேற்பட்ட காவலர்களைத் தேர்ந் தெடுத்து, உரிய பயிற்சியை அளித்து வருகின்றோம்.

பதவி உயர்வு கிடைக்காமல், பல ஆண்டுகளாக ஒரே பதவியில் தேங்கி இருக்கிற நிலையை மாற்றி, 1,000-க்கும் மேற்பட்டோருக்கு, ஒரே நேரத்தில் பதவி உயர்வு அளித்து, ஊக்குவித்து வருகின் றோம்.

வாகனங்களையும், வயர்லெஸ் கருவி போன்ற தொலைத் தொடர் புச்சாதனங்களையும், படிப்படியாக எல்லாக் காவல் நிலையங்களுக்கும் வழங்க, இந்த அரசு எல்லா ஏற்பாடு களையும் செய்துவருகின்றது. அது மட்டுமன்றி, காவலர்களின் நல்வாழ் விற்கு, நல்ல பல திட்டங்களை நாளும் தீட்டி, முனைப்புடன் செயல் படுத்தி வருகின்றோம்.

### இந்த அரசே அமைத்தது

காவலர்களுடைய திறமையை மேம்படுத்த, பயிற்சிகளை அளித்து வருகிறோம்.



Special Security Group என்று அழைக்கப்படும், சிறப்பு பாதுகாப் புப் படை; Temple Protection Force என்னும் கோயில் பாதுகாப்புப் படை; சில குறிப்பிட்ட பணிகளை நுணுக்கமான முறையில் செய்து முடிக்க, Special Task Force என்னும் அதிரடிப்படை போன்ற சிறப்புப் படைகளை, இந்த அரசுதான் அமைத்துள்ளது என்பதை, பெரு மிதத்துடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

மகளிரின் நலம் பேணுவதில், இந்த அரசு கொண்டுள்ள மிகுதி யான வேட்கையின் காரணமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும், மகளி ருக்கென ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தைத் தொடங்கி வருகின்றோம். இதுவரை தமிழகத் தில் 8 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தொடங்கப்பட்டு, நல்ல முறையில் செயல்பட்டு வரு கின்றன.

திருநெல்வேலி-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார், ஆகிய மாவட்டங்களுக்கு உரிய, அனைத்து மகளிர் காவல் நிலையங்களையும் நாளை நான் திறந்து வைக்க உள் ளேன். அப்போது இந்த எண் ணிக்கை பத்தாகிவிடும்.

### சிம்ம சொப்பனம்

ஆக, தமிழகத்தின் காவல் படை, தலை சிறந்த படையாக, பார் புக ழும் வண்ணம் பணியாற்ற, உகந்த சூழ்நிலைகளை உருவாக்குவதில், நான் கண்ணும் கருத்துமாக இருக் கிறேன். அவ்வாறு செய்வதன் மூலம், அவர்களின் அருஞ்சேவை, மக்களுக்கு எளிதில் சென்றடைய வேண்டும், என்பதே எனது நோக்கம்.

தீயவர்களுக்குச் சிம்ம சொப்பன மாகவும், நல்லவர்களுக்கு நண்பர் களாகவும், காவல்துறையினர் இருக்க வேண்டும் என்றே விழிப்புணர்வுட னும், துணிவுடனும் செயல்பட்டால், ஏழை எளியோர்கள் நலமும் வள மும் பெறுவார்கள் என்பதில், எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும், சிறைத் துறையின ரும், ஊர்க்காவல் படையினரும், அத்தகைய வல்லவர்களாக, நல்ல வர்களாக விளங்க வேண்டும், என்ற என் மனக் கருத்தினைத் தெரி வித்து; இவ்விழாவினைத் திறம்படச் சீரோடும் சிறப்போடும் நடத்த ஏற்பாடு செய்த காவல்துறை இயக்குநர் திரு எஸ். ஸ்ரீபால் அவர்களுக்கும்; வீர விளையாட்டுக் களைச் சிறப்பாக அமைத்த, காவல் துறைக்கூடுதல் இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும், காவல் துறையின் அனைத்து மட்ட அலு வலர்களுக்கும், ஆலோசனை கூறி ஆக்கப் பணிகளைச் செய்த அனை வருக்கும், எனது பாராட்டுதல் களைத் தெரிவித்து, விடை பெறு கிறேன். நன்றி, வணக்கம்.

— 'இந்திரன்'

## மகாராஷ்டிர மாநில நிலநடுக்கம்:

# மாண்புமிகு முதல்வர் உடனடியாக ரூ.10 இலட்சம் உதவி!



- துரித நிவாரணப் பணிக்குத் தாராள நன்கொடை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேண்டுகோள்!

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள உஸ்மானபாத் மற்றும் லதூர் மாவட்டங்களில் 30.9.1993 அன்று ஏற்பட்ட கடுமையான நில நடுக்கம் காரணமாக, ஏராளமான உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டதை அறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்ததோடு, இந்த நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோரின் துயர் துடைப்புப் பணிக்கெனத் தமிழக அரசின் சார்பில் 10 இலட்சம் ரூபாயை உடன் வழங்க ஆணையிட்டார்.

மேலும், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மகாராஷ்டிரா மாநிலத்திற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து













துயர், துடைப்புப் பணிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்திருந்தார்.

வரலாறு காணாத இந்த துயர்ச்சம்பவத்தில் பல்லாயிரக்கணக்கானோர் பரிதாபமான முறையில் மரணமடைந்ததுடன், இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் இடிபாடுகளுக்கிடையே சிக்கித் தவித்துக்கொண்டிருப்பதை அறிந்து துயரமுற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், மிகப் பெரிய அளவில் துயர் துடைப்புப்பணிகள் மேற்கொண்டால்தான் இந்த இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்டுள்ள விளைவுகளைச் சமாளிக்க முடியும் என்கின்ற எண்ணத்திலும், தேசிய அளவில் அனைத்து மாநிலங்களும் ஒன்றுபட்டுத்தங்களால் இயன்ற பொருள் உதவி மற்ற உதவிகளையும் அளித்து இந்த இக்கட்டான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்திலும்.

''தமிழக முதலமைச்சரின் மகாராஷ்டிர மாநில நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோர்களுக்கான நிவாரண நிதி'' (Tamil Nadu Chief Minister's Relief Fund for Rehabilitation of Maharashtra Earthquake Victims) என்ற ஒரு நிவாரண நிதியை ஏற்படுத்தி உள்ளார். தனது சொந்தப் பணத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாயை நன்கொடையாக வழங்கி, இந்த நிவாரண நிதியினைத் துவக்கி வைத்துள்ளார்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில், கழகத்தின் சார்பில் 5 இலட்சம் ரூபாயை இந்த நிவாரண நிதிக்கு வழங்கினார்.

இந்தியத் துணைக் கண்டத்தைப் பாதிக்கும் எல்லாச் சம்பவங்களிலும் தங்களுக்குரிய முழுமையான பங்கை ஆற்றிவரும் தமிழக மக்கள், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள இந்த நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துரிதமான முறையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்பான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிவாரண நிதிக்கு நன்கொடை வழங்க விரும்பும் கொடை உள்ளம் கொண்டவர்கள் நன்கொடைத் தொகையைக் காசோலையாகவோ அல்லது டிராப்ட்டாகவோ (Tamil Nadu Chief Minister's Relief Fund for Rehabilitation of Maharashtra Earthquake Victims) என்ற தலைப்பில் எடுத்து, பொதுத்துறைச் செயலாளர், புனித ஜார்ஜ் கோட்டை, தலைமைச் செயலகம், சென்னை-600 009 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

13.10.93 அன்று ஒரு நாள் மட்டும், ரூ.53,23,299|- ''தமிழ்நாடு முதலமைச்சரின் மகாராஷ்டிரா நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி''க்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடம் வழங்கப்பட்டது.

இதுவரை தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் முயற்சியால், 'தமிழ்நாடு முதலமைச்சரின் மகாராஷ்டிர நில நடுக்கத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரண நிதி'க்கு இதுவரை ரூ.1,41,57,504|- திரட்டப் பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23
தமிழரசு






விழுப்புரம் - ராமசாமி படையாட்சியார்
மாவட்டத் தொடக்கவிழா
மற்றும்
தென்னார்க்காடு - வள்ளலார்
மாவட்டப் பெயர் சூட்டும் விழாவில்...